திராவிடநாடு

19–7–59 ★ விலை 16 காசு

திரு. மகேந்திரன்

இரத்னலட்சுமி தந்த விருந்து!

அந்த மாளிகையில் எத்தனை பெரிய தடவை எழில்மிகு விருந்துகள் நடந்ததுண்டு. மாமன்னன் எழில் மாடம்! விருந்தின் வகையினையும், அருந்த வந்தோர் விபரத்தையும் சொல்லவாவேண்டும்? பளபளக்கும் அங்கியணிந்தோரும் பராக்கு மன்னவா என்று பல்தெரியத் துதித்தோரும் பஞ்சாங்கத்தைக் கையில் வைத்தபடி சோதிடம் சொல்லிடும் புலிகளும் காட்டுப்புலிகளை மட்டுமின்றி மனிதப் புலிகளையும் வேட்டையாடும் வீரம் கொண்ட இராஜாக்களும், சீமான்களும், செல்வவான்களும் அவர்களுடைய புள்ளிமான்களும் அந்த மான்களின் விழிவீச்சு நமக்குக் கிட்டாதா, எட்டாதா, அவள் உறவு என்ற ஏக்கம் கொண்ட காளையரும் பாளைச் சிரிப்பை உதிர்த்துக் கொல்லாமல் பலரைக் கொல்லும் குங்கும உதட்டுக் கொஞ்சுமொழிக்காரிகளும் நடனராணிகளும், இன்னிசைவாணரும், காவியப் புலவரும், ஓவியர்திலகமும், இப்படி ஒவ்வொரு விதத்தவரும் வந்ததுண்டு! மன்னன் தந்த விருந்தை உண்டுகளிக்கவல்ல; வராவிடில், எங்கே மன்னனின் புன்சிரிப்புக் கிட்டாமற் போய் விடுமோ மாபாதகம் செய்தோமெனத் தண்டிப்பானோ என்கிற அச்சம் துளைக்கவே வந்து அமர்வர். மனதுக்குப் பிடிக்கவில்லையாயினும், மன்னன் மகிழ்ந்தால் தாமும் மகிழ்ந்ததாகத் தலையாட்டுவர்! மந்தியை மலர் என்பான் மன்னன். ஆம், அரசே அருமையான முல்லை எனல் வேண்டும் கவிவாணன்! மறுத்தால் அவன் தலை கொல்லையில் உருளும். கோட்டான் கூவலை குயிலொலிக்கு மன்னன் ஒப்பிட்டால் ஆம் ஆம் எனல் வேண்டும். இன்றேல், அரசருக்கு அவமரியாதை இழைத்தவனாகக் கருதப்படுவான். விருந்துகளிலே எப்படி அறுசுவையுமிருக்குமோ, அதேபோல

திரு. [illegible]

உயிர் அறுக்கும் வர்ணத்யுமுண்டு! சுருங்கச் சொன்னால், அவர்களெல்லாம் அங்கே போவது விருந்து அருந்தி, தாம் மனநிறைவு பெற அல்ல; மன்னன் மனநிறைவு பெறுவதற்காக!!

இராணி இரத்னலட்சுமி தந்தவிருந்து அப்படியல்ல. ஏனெனில், அவள், தன்னுடைய மன மகிழ்ச்சிக்காக இந்த விருந்தை ஏற்பாடு செய்யவில்லை; இத்தனை நாட்களும், மருண்டவர்களாய்க் கிடந்தவர்களுக்கு மனமகிழ்ச்சியூட்டுவதற்காக இந்த விருந்தினை ஏற்பாடு செய்தாள். சர சரக்கும் சரிகைப் பட்டாடை புனைந்தோருக்காக அல்ல பரபாக்கப் பணிபுரியும் பாட்டாளிகளின் பிரதிநிதிகளுக்காகப் படைத்தாள். எந்த மணி மாடத்திலே, ஏந்திழையும், பொன்னுபரணம் பூண்ட சீமான்களும் அமர்வாரோ, அதே மணி மாடத்தில் ஏழை மகளிரையும் வியர்வையொன்றைத் தவிர வேறு ஆபரணம் ஏதும் பூண்டறியாத மக்களின் தொண்டர்களையும், அழைத்து அளித்தாள் விருந்து. அறுசுவையுடன் மட்டுமல்ல! அதோடு, புதியதோர் சுவையையும் சேர்த்துத் தந்தாள்!!

அதென்ன சுவை? தேனில் தோய்த்த பலாவினும் பெரிதா! காய்ச்சியெடுத்துப் பதப்படுத்திய பாலினும் சிறந்ததா! கனிதரும் களிப்பினும் இனிதா! அரச மண்டபத்திலே, அரசி இரத்னலட்சுமி வைக்கும் விருந்தினும் கிடைக்காத அச்சுவை என்னவாயிருக்க முடியும்? ஒரு வேளை பாரசீக நாட்டின் மண்ணிலே விளைந்த பக்குவமான பேரிச்சம் பழத்தை காச்மீர தேசத்து வனப்புமிக்க ஆப்பிள் துண்டுகளோடு சேர்த்து, பாரி ...லேயிருந்து தருவிக்கப்பட்ட பான வகைகளோடு ... சீன தேசத்து பீங்கான் தட்டுகளிலே, ...சி தவிர வேறெதும் இதுவரை கண்டறியாத அந்த ஏழைப் பிரதி... இட்டாளா? எச்சுவை ... தந்தாள் ... என்றெல்லாம் கேட்கத் துடிப்பீர்! அ... அந்த சுவை, நாவுக்கு அல்ல; இத...துக்கு!!

ஓகோ—இசைச் சுவை போலும், இசையுடன் கலந்த நாட்டியச் சுவையினை எடுத்தளித்தனர் போலும், எழிலரசியல்லவா, கேரளத்து மயிலும் தமிழகத்துக் கிளியும் கன்னடத்துக் குயிலும் ஆந்திரத்து அன்னமும், மணிபுரி நாட்டியமும் அந்த மணி மாடத்தில் நடந்தது போலும்! இதயத்துக்கு அளித்திட இதைவிட வேறென்ன சுவை வேண்டும், எனச்சாடுவீர் நீவிர்! அல்ல, அல்ல. இரத்னலட்சுமி, தந்த விருந்தில், இதுபோன்ற சுவைகள் கிடைப்பது கடினமா? அப்படித் தந்திடினும், துந்துபி முழக்கியபடி இது நாள் வரையில் துடித்துக் கிடந்த மக்களின் மனதைத்தான் அது வசப்படுத்திவிடுமா! எந்தச் சுவை, மழலையின் கீதத்தைவிட, தாய் மொழி தரும் இன்பத்தைவிட, தனக்குறும் பசியைவிட, ஏன்?

உயிரையும்விட, விடுதலை வீரர்களால் பெரிதெனக் கருதப்படுகிறதோ அந்தச் சுதந்திரத்தையும், இரத்னலட்சுமி, சேர்த்துப் படைத்தாள்!!

* * *

ஜூன் 30! இமயமலைச் சாரலிலே உதய சூரியனின் ஒப்பற்ற ஒளிச் சிதர்கள் இருளையகற்றிட எழுந்தன.

பனிமலையின் குழந்தைபோலக் கிடக்கும் குறுநிலத்தில் வாழும் 85-இலட்சம் மக்களுடைய கண்களிலும் புது ஒளி பூத்தது.

நேபாளம்!—அன்றையதினம், புது விழாக் கொண்டது. பூரித்தது. மகிழ்ந்தது. ஆடிற்று. பாடிற்று.

ஆ... ...ாண்டு காலமாக மன்னராட்சியிலே கிடந்த அந்த மண் அன்று ... ல் ஜனநாயகம் எனும் நல்விளை...ப் பெற்றது! அந்த நல் ... கதை மக்கள் கரத்திலே ... அந்த மன்னனும் துணிந்ததில்லை. மண்டைகள் மலர்கள் போல் கொய்யப்பட்டு இரத்தம் ஆறுபோல் ஓடி, எலும்புகள் மலைகளாகி, கடைசியில் அதேகதி தனக்கும் வந்துற்றபோதுதான், அரசர்க்கரசன் அடிபணிந்தான் என்பதுதான் வரலாறு. ஆனால், நேபாள மன்னன் மகேந்திரன் மக்களுக்காக மார்தட்டிய வீரனாகும்! தந்தை திரிபுவனர் ஆட்சிக்குப் பிறகு தப்பினால் போதுமென இந்திய எல்லைக்கு வந்தான் அவன்! காரணம், நேபாளத்தில் ஆண்டது மன்னன் தானெனினும், அந்த மன்னனையே ஆட்டிப்படைக்கும் சக்தி பெற்றவர்களாயிருந்தோர் இராணுக்களாகும். எப்படி அய்யர் மகன் அய்யரோ அதேபோல இராணுவின் மகன் இராணு என்கிற வழக்கப்படி அவர்களே நாடாளும் பிரதமர்களாக்கி இராச்சியபாரத்தை நடத்தி வந்தனர். அவர்கள் அளந்து கொடுப்பதுதான் வாழ்க்கையெனும் தளைகள் பிடிக்காமல்தான் மகேந்திரன் ஓடிவந்தான்! அவனுக்குக்கு எந்தப்படிப்பு அவசியம்? அதை எப்படியெப்படி அவன் கற்றுக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் கட்டுப்படுத்தினர், இராணுக்கள்!! இப்படித் தன் சுதந்திரத்தை இழந்து தவித்ததால்தான் போலும் மகேந்திரனுக்கு மக்களின் சுதந்திர வேட்கையைச் சுலபத்தில் அறிந்துகொள்ள முடிந்திருந்திருக்கிறது.

நேபாள மன்னர்களிலேயே தமிழகத்தை விடக் கொஞ்சம் பெரிதான அந்த இமயமலைச் சாரல் நாட்டின் பல பகுதிகளுக்கும்போய் மக்களின் நிலைமைகளை அறிந்தவன் மகேந்திரன். அவன் நினைத்தால் தனக்கு மக்களிடம் கிடைத்த மதிப்பைப் பயன்படுத்தி தானே எல்லாம் என்கிற நிலைமையை உண்டாக்கிக் கொண்டிருக்கமுடியும்! மாறாக எல்லாம் மக்களுக்காக என்கிற உயரிய கருத்தை உலவவிட்டிருக்கிறான்! வாக்குரிமை அளித்து அதன்படி ஜனநாயக முறையில் அரசாளும் சுதந்திரத்தை அளித்திருக்கிறான்!!

109-உறுப்பினர்கள் கொண்ட பிரதிநிதிசபை — ஒரு மந்திரிசபை—அதற்குக் கட்டுப்பட்ட மன்னன்—இதுதான் நேபாளத்தின புது அரசியல் ஆகும். கோய்ராளா என்கிற நேபாள காங்கிரஸ் தலைவரைப் பிரதமராகக் கொண்ட கட்சி 74-இடங்களைப் பெற்று இப்போது மந்திரிசபையை

(13-ம் பக்கம் பார்க்க)

பதினெட்டு

மலர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (19—7—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 1

காலமெனும் புரு எவ்வளவு விரைவாகப் பறக்கிறது! நடந்துபோன நிகழ்ச்சிகளை ஒரு விநாடி நினைத்துப் பார்ப்போமேயானால், பெருமூச்சும், பெருமிதமும் போட்டி போட்டுக் கொண்டன்றோ, ஓடோடி வருகின்றன!!

எய்த அம்பும், வீசிய சொல்லும், இறந்த காலமும் திரும்பாது என்பார்கள். அதைப்போல, உருண்டோடிப்போன காலத்தை மீண்டும் நாம் சந்திப்போம் என்பதில்லை. எனினும், தித்திக்கும் நினைவுகளை அசைபோடும்போது, அடடா, மனதுக்குள் மலையத்தனை இன்பமன்றோ சுரக்கிறது!!

பதினேழு ஆண்டுகள் ஓடிவிட்டன—ஏதோ, நேற்றுப்போலிருக்கிறது — 'திராவிட நாடு' ஆரம்பித்து. குமுறும் சூறுவளியையும், கொந்தளிக்கும் கடலையும், நிலையிலாத எழுத்துத் துறையையும் நெஞ்சத்திலெண்ணியே' பயணத்தைத் துவக்கினோம். இன்றுபோலவா அன்று? அப்பப்ப! சந்தேக மேகங்கள் ஒருபுறம்! 'சஞ்சலப் புதர்கள் மனதை வளைக்கும் அளவில்!! எனினும், தாயகமே நீயிருக்கிறாய் எனும் நெஞ்சுத் துணிவுடன், புதுப்பாதையில் இறங்கினோம். தமிழ்த்தாய், தனயனைக் கைவிடவில்லை! தாயினும் அன்புதரும் இயக்கத்தின் உடன்பிறந்தார்கள், உவகை பெற்று, நமக்கு ஆதரவளிக்கத் தயங்கவில்லை!! பொன்னினும் மணியினும், மேலான செல்வமன்றோ, இது? நாட்டை நம்பினோம்! இன்று பதினெட்டாம் ஆண்டுக்குள், ஏடு அடியெடுத்து வைக்கிறது — உள்ளபடியே தமிழே! தாயே! என்று நினைத்து மனம் பூரிக்கிறோம்!!

தமிழகத்துக்குப் பிற ஏடுகளைவிட, நமது ஏடு தன்னுடைய பணியினைச் செவ்வனேசெய்திட என்றும் தயங்கியதில்லை. வண்ணமின்றி, கவனத்தை இழுக்கும் படங்களின்றி, சகோதரிகளின் மனதைக் கவரும் கதைகளின்றி, வெறும் கொள்கையினை மட்டுமே கூறி, வாழ்வதென்பது எளிதல்ல. இதுதான், ஏடு நடத்தும்முறை, என்று விளக்கம் தர முன்வரவில்லை! எனினும், இவையிருந்தால்தான், ஏடு வாழும் என்கிற நிலைமையினைத் தோழர்களின் இலட்சிய ஆர்வம், தோல்வியுறச் செய்திருக்கிறது!! எப்பக்கம் திரும்பிடினும், இலட்சிய விளக்கத்தையே சொல்லி, ஏடு வாழ்கிறது. பதினெட்டாம் ஆண்டுக்குள்ளும் நுழைகிறது.

ஆசையிலாமலில்லை, நமக்கு! ஆங்கில ஏடுகளையும், ஆங்காங்கிருந்து வெளிவரும் ஏனைய மொழி ஏடுகளையும் காணும்போது, "இப்படியெல்லாம் நாமும் ஏன் நடத்தக் கூடாது?" என்கிற ஆசை, அலைமோதாமலில்லை. அதற்குரிய வாய்ப்பும் வசதியும் பெற முடியாத நிலையிலுமில்லை. ஆனால், நேரம்!! எதைக் கவனிப்பது? எந்தளவுக்கு இப்போது பொறுப்புகள் குவிந்துள்ளன என்பதை என்னரும் தோழர்களுக்கு எடுத்துச் சொல்லியா தெரிவிக்கவேண்டும்? ஆங்கில ஏடு "ஹோம்லண்ட்" ஒருபுறம்! அன்றாடம் பெருகி வரும் பொதுக்கூட்டங்கள் மற்றோர் புறம்! சட்டசபை இன்னொருபக்கம்! இதையெலாம்விட, ஓடும் காலத்தை யொட்டி உடல் விரும்பும் ஓய்வு ஒருபுறம்!! இத்தனையையும் சமாளித்துக்கொண்டு, எழிலையும் புதிய எழுத்துக்களையும் எப்படி அளித்திட இயலும்? எப்படியோ, கூட்டுத் தோழர்களின் தொண்டால், 'திராவிடநாடு' பீடுநடை போடுகிறது! இம்மியளவும், இலட்சியப் பிழையின்றி கருத்து முரசமாக விளங்கிவருகிறது!!

கடந்த ஆண்டுமுதல், இயக்கத்தில் பெருகிவரும் எழுத்தாளத் தோழர்களுக்கு வாய்ப்புத் தருவதென முடிவுசெய்தோம். முடிவு சோகத்தைத் தரவில்லை; மாறாக, மகிழ்ச்சி நிரம்ப வழிசெய்துள்ளது. ஏனெனில், நல்ல கட்டுரைகள் கிடைக்குமா, புள்ளிவிபரச் சான்றுகள் தந்து வளரும் கொள்கைக்கு உரம் ஊட்டுவாரா என்று ஐயுற்றோம்! ஐயத்தை விரட்டி ஓட்டி, புதியதோர் எழுத்தாளப் பரம்பரை உருவாகிவிட்டது என்பதைப் பல தோழர்கள் காட்டிவருகிறார்கள். அவர்களுக்கெல்லாம், நமது வாழ்த்தையும் அன்பையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எது நேரினும், எந்த நேரமானாலும், ஏடு குறித்த நேரத்தில் வந்துவிடவேண்டுமென்பதில், சலியாத அக்கரைகாட்டி, தங்கள் குடும்பத்தைப்போலப் பாடுபடும் தோழர்கள், திராவிட நாட்டிற்கு ஆரம்பத்திலிருந்து கிடைத்த பெருத்த மூலதனமாகும். அன்று முதல் இன்றுவரை, அயராஉழைப்புடன், பணியாற்றிவரும் அச்சகத் தோழர்களுக்கு, இந்தப் பதினெட்டாம் ஆண்டில், நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கடந்த இதழோடு, தோழர் ப. உ. சண்முகம், M.L.A. தந்துவந்த 'காதல் பரிசு' முடிவுற்றிருக்கிறது. தொடர்ந்து, இனியும்பல நல்ல தொடர்கதைகளும், சிறுகதைகளும், வரலாறுகளும் இடம்பெறும்ஏற்பாடுகள்செய்யப்படுகின்றன! வேண்டியஓவியமும்ஏட்டினை, அழகுபடுத்துமென தோழர்கள் எதிர்பார்க்கலாம்!!

பதினெட்டு ஆண்டுகளில், அன்று முதல் 'நான் திராவிடநாடு ஏஜண்டு' என்று சொல்லிப் பெருமைப்படும் பல, பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும், புதிது புதிதாக நமது விற்பனையாளராவோருக்கும் அன்று முதல் இன்றுவரை சந்தாதாரராக இருந்து ஆதரவு தருவோருக்கும் நமது அன்புப் பாராட்டுதல்கள்.

-வருக திராவிடம்! பெறுவோம் இன்பம்!!

உல்லாசிகள் ஓடம்

"பெரிய சீமான் வீட்டுச் சிங்காரிபென்ருல் எனக்கேன்ன? நானும் மாஜி மந்திரியின் மனைவிதான்! இரண்டில் ஒன்று பார்த்துவிடுகிறேன். அடுத்த முறை, அவள் எப்படி தலைவியாயிருக்கமுடியும் என்பதைப் பார்க்கிறேன்."

*

"கேளடி! தினம் தினம், அந்தம்மா, 'ஜீப்'பில் சுற்றி வருகிருர்களே. ஆபீசையே வீட்டில் வைத்துக்கொண்டு, அங்காடிக்குப் போகவும், அவரைக்காய் துவரைக்காய் வாங்கவும் 'ஜீப்'பை உபயோகிக்கும் போது, சினிமாவுக்குப் போய்விட்டு வரக் கொஞ்சம் இரவல் கேட்போமே என்று கேட்டேன்டி. எனக்கு இல்லையென்றுவிட்டாள்! இருந்துப் பொயா, சமூகநலம்? பார் என்ன செய்கிறேன் என்று!!"

*

மாவீரன் நெபோலியன், களம் பல கண்டு பெற்ற நாடுகளின் பிரதிநிதிகளாகத் தன் சொந்தக்காரர்களையே நியமித்தானும்! இந்தச் சுயநல ஆசையே, அவனது வீர வெற்றிகளை மண்ணுக்கு இரையாக்கி, அவனையும் தீவிலே கொண்டுபோய் அடைத்தது என்பார்கள்!! நிரமும் வீரமும் கொண்டு, தியாகத் தீயிலே குளித்து, சுதந்திரம் பெற்றதாகச் சொல்லிக் கொள்ளும் காங்கிரஸ் தலைவர்களும், தத்தமது களிப்புக்காக, வேண்டியவர்களின் உல்லாசத்துக்கென்று ஏற்படுத்தியிருக்கும் இலாகாக்கள் ஏராளம். வெளிநாடுகளில் அரசியல் தூதர்கள் என்று அக்காளையும் அன்புக் குரியவர்களையும், மருகனையும் மதிப்பைப் பெற்றவனையும் அனுப்பி வைத்து, அனுபவிக்கச் செய்து வருகிருர்கள். போதாக் குறைக்கு, இங்குள்ளோரின் போக போக்கியங்களுக்கென, ஒரு சில புது இலாகாக்களையும் அமைத்து, அவைகளைத் தம்மவர் தட்டினால் திறக்கும், 'அலிபாபாக்குகை'யாக்கியிருக்கின்றனர்! அவைகளில் ஒன்று சமூக நல போர்டு, என்பதாகும்.

சமுகத்துக்கு நலம் பயக்க இந்தப் போர்டுகள் பணிபுரியும் என்று சொல்லிக் கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கொடுத்து இந்தப் போர்டினை அமைத்தது, டில்லி. இதற்கு, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளின் உதவியும் ஒத்தாசையும் உண்டு. ஊருக்கு ஊர் அவதியுறும் பெண்களுக்கு ஆபத்துக் காலங்களில் உதவவும், அவர்களை விழிப்புள்ள வீராங்கனைகளாக்கவும், குழந்தைகளின் நலம் பேணவும், குக்கிராமம் தோறும் நன்மைகள் பெருகவும், இந்தப் போர்டு நிறுவப்படுவதாகச் சொல்லப்பட்டது! இதைத் துவக்கி வைத்த காலத்தில் பண்டிதநேரு, பரமானந்தமடைந்தார்— இந்தப் போர்டு, சமுகத்தின் முக்கிய அங்கமான மாதர்களின் மன வியாதியையும், நோயையும் தீர்க்கும் புண்ணிய கூடமாக விளங்கும்! திருத்தலமாகத் திகழும்! இதில் ஊழியராக அமர்வோர், தியாகவல்லிகளாக விளங்குவர்! துயர் துடைக்கும் தூயமணிகளே இப்பணியில் ஈடுபடப்போகின்றனர்! — என்று சொல்லப்பட்டது.

தகுதியான தலைவர் ஒருவர் வேண்டுமென்று சொல்லி, அப்போது நிதியமைச்சராயிருந்த சிந்தாமன் தேஷ்முக் அவர்களின் அந்திய. காலத்து அந்தரங்க மனைவியெனும் சுந்தரமான வாய்ப்பைச் சொகுசாகப் பெற்ற, துர்க்காபாய் அம்மையாரை நியமித்தனர்.

இந்திய உபகண்டத்திலேயே இந்த வேலைக்கு அவர் ஒருவர்தான் இருக்கிருர் என்பதல்ல! சென்னையில் சேவா உணர்ச்சிக்குப் பெயர்போன முத்துலட்சுமிரெட்டி போன்ருேரும், மூழ்மூச்சுடன் பெண்களுக்காகவும் அவர்தம் தொல்லை போக்கும் தூய ஆர்வத்துடன் பணிபுரியும் பலரும் இல்லாமலில்லை. எனினும், துர்க்காபாய், நிதியமைச்சரின் மனைவியாயிற்றே! அதனல் அமர்த்தினர்!!

தலைமைப்பீடம் அப்படிச் செய்ததும், அதேவழியைப் பின்பற்றி, எங்கெங்கு இந்தப் போர்டின் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டனவோ அங்கெல்லாம், மாஜிமந்திரியின் மனைவியர், சீமான் வீட்டு விதவைகள், வேலையில்லாத வேணிகள், அமரலாயினர்.

விளைவு என்னவாயிற்று தெரியுமா? இதோ, விவரிக்கிறது, அரசாங்கக் கணக்கீட்டுக் குழு:-

ஊர்ச்சண்டைகள் பெருத்துவிட்டன.

போட்டியும், பொருமையுமே மிச்சம்.

ஒரு வேலையும் ஒழுங்காக நடக்கவில்லை.

சமுகநலத் திட்டங்களைப் பற்றிச் சண்டமாருதமாகப் பேசுவார்கள் நமது மந்திரிமார்கள்! அதன் அழகுபற்றி, சர்க்காரின் மதிப்பீட்டுக் குழு, வர்ணிக்கிறது இவ்விதம்!! வர்ணனையின், முழுவிளக்கத்தையும் கேளுங்கள்:-

மாதர் நிலையங்கள், குழந்தைகள் கூடங்களுக்கான அடிக்கற்கள் நாட்டப்படுவதுண்டு; கட்டிடங்கள் எழும்புவதில்லை.

காரணம், கவலைக் குறைவும் திறமைக் குறைவுமே ஆகும்.

சோதனைக்கென அமைக்கப்பட்டு நடந்துவரும் இத்திட்டங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு எட்டு மாதங்கள்வரை சம்பளம் தரப்படுவதில்லை.

கிராம ஊழியர்கள்பாடு, திண்டாட்டமாகிவிடுகிறது..

முற்றிலும் கோணல்! முயற்சி வீண்!!— என்கிறது, சர்க்காருக்குப் பயப்படும் நிலையில் இல்லாத மதிப்பீட்டுக் குழு. கட்டிடம் கட்டப் போகிருேம், கல்நாட்ட வாருங்கள் என்ருல் கனஜோராக 'சபோலாக்கள்' போவதுண்டு; பூமாலைகளையும், புகழ்மாலைகளையும் வாங்கிக் கொண்டு வந்து கணவனிடமோ, உறவினரிடமோ, காட்டிப் பெருமை கொள்வதோடு சரி. பிறகு, கட்டிடம்

(13-ம் பக்கம் பார்க்க)

உலகம் பரவிய
திராவிட மொழிகள்

உலகில் வழங்குகின்ற பன்னூற்றுக் கணக்கான மொழிகளின் அமைப்பு, நெறிமுறைகளைப் பற்றி ஆராயப் புகுவோமானால், அவ்வாராய்ச்சி 'உலக மொழிகளின் முதல் மொழியாக—தலை மொழியாக—ஒரு மொழி இருந்தது; பின் சிறிது சிறிதாய் மங்கிச் சிதைந்தது, என்ற தெளிவைத் தருகிறது. 'நுங்கும் நுரையும் சுக்கி நுடங்கும் பாடிவரும் பேராறு சமவெளியிற் புகும்பொழுது பற்பல கிளைகளாகப் பிரிந்து செல்வதுபோல் உலகின் மொழிகள் வேறொரு பெருமொழியினின்றும் பிரிந்திருக்க வேண்டுமென்ற முடிவை மொழியியலறிஞர்களும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இங்கு கூறப்பட்ட கிளைமொழிகளின் தலைமொழி 'திராவிடமொழி' தான் என்பது உலக மொழிகளின் ஒப்புமையை நோக்குங்கால் 'வெள்ளிடை மலை'யாய் விளங்குகிறது. ஈண்டு, திராவிட மொழி வழங்கிய ஒரு காலத்திலே உலகெங்கும் நிலவிய ஒற்றுமை குறித்தும், உலகம் பரவிய திராவிட மொழிகளைப்பற்றியும் சிற்சில கருத்துக்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

"செம்புக் காலத்தில் கிழக்கே மத்தியதரை முதல் சீனா வரையில் ஒரே வகையான நாகரிகம் நிலவியது"

By Victorchristian
'Indian and pacificworld)
Page 63.

*

"அமெரிக்கரின் முன்னோர், (ஆரிய மக்களுக்கு முந்தியவர்களான) துரானிய வகுப்பாரின் மொழியை வழங்கியோராயிருத்தல் வேண்டும். அத் துரானியர்களுள் முக்கியமான பிரிவினர் தன் 'திராவிடர்கள்' எனப்பட்டனர். (அதாவது அமெரிக்கரும் திராவிடரே என்றுசொல்ல இடமிருக்கிறது)"

By Hederick Wright
'Origin and antipuity of man'.

*

"...டெய்லர் (Tailor) என்னும் பாதிரியார் மயோரிய (நியூசிலந்து) மொழி தமிழுக்கு இனமுடையதாதலை நன்கு விளக்கியுள்ளார்".

—ந. சி. கந்தையா பிள்ளை
'தமிழ் இந்தியா' பக்கம் 18

*

-(காஞ்சி-வில்லவன் கோதை)-

"சிங்களமொழியும் திராவிட மொழி இனத்தைச் சேர்ந்ததே!"
—W. E. Gundavarthana.

(குறிப்பு:- கலிங்க தேசத்தில் வழங்கிய தமிழ், பாலி மொழிக் கலப்பினால் சற்றே உறழ்ந்தும் பிறழ்ந்தும் சிங்களமாக மாறிற்று.)

*

"மொகஞ்சதாரோ எழுத்துக்களைப் போன்றன இலிபிய வனும் திரத்தை அடுத்த செவிமா என்னுமிடத்திலும் காணப்படுகின்றன"

Prof. Longton

(குறிப்பு:- மொகஞ்சதாரோ மொழி திராவிடமே என்பது அனைவரும் அறிந்ததே!)

*

மொகஞ்சதாரோ எழுத்துக் குறிகளையும், உச்சரிப்பு ஒலி முறைகளையும் பெரும்பாலும் ஒத்ததாக சைபீரிய மொழி வழங்குகிறது. இம்மொழி பாஸ்கு (Basqu)என்று வழங்கப்படுகிறது.

"மத்திய தரை நாடுகளில் ஆதியில் வழங்கியது இப்பாஸ்கு மொழி திராவிடத்தோடு நெருங்கிய உறவுடையது"
—H. G. Wells.

*

"பழைய இத்தாலிய மொழியான 'எதிருஸ்கி' திராவிட மொழிக் கூட்டத்தைச் சேர்ந்த இலிபிய மொழி இனத்தைச் சார்ந்தது!"

—ந. சி. கந்தையா பிள்ளை

*

பழைய திராவிடச் சொற்கள் 'பிராகூய்' (வடநாட்டில் வழங்குவது) மொழியிற் காணப்படுகின்றன. கண், கல் என்ற திராவிடமொழிப் பதங்கள் க்கண், க்கல் என்று வழங்குகின்றன.

*

'காபு'மொழியில் (ஆப்பிரிக்காவில் வழங்குவது; பழங்குடிமக்கள் பயிலுவது) வை, எடு, நூக்கு போன்ற திராவிடச்சொற்கள் சிறிதளவு மாற்றமுமில்லாது வழங்கப்படுகின்றன.

*

ஜாவாவிலுள்ள பெசிரான் என்னும் மக்களிடையே இன்னும் திராவிடக் குடும்பப் பெயர்கள் வழங்குகின்றன!

*

எகிப்திய மொழியில் குரங்கையும், யானைத் தந்தத்தையும் குறிக்க கவி, ஏப என்னும் சொற்கள் வழங்கின. இவை முறையே கவி, இபம் என்னும் சொற்களின் திரிபு.

—ந. சி. கந்தையா பிள்ளை.

*

கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரிலபட்டர் 'ஆந்திர திராவிட பாஷைகள்' என்ற தொடரைத் தன்னுடைய நூலில் வழங்கியிருக்கிறார்.

—பேராசிரியர் மு. வரதராசனார்.
"மொழி ஆராய்ச்சி"

"இலட்சம்!"

இலட்சமா? யாருக்கு? கொடுப்பவர் யார்? எதற்காக? ஏன்? எப்போது? என்பன போன்ற வினக்கள் எழுவது இயற்கை!

அந்த இலட்சம், வெள்ளத்தால் உள்ளம் உடைந்து வீடுவாசல்களை இழந்து, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வாடிடும் பயிரெனத் துவண்டுவிழும் மக்களுக்குத்தான் — அஸ்ஸாம் நாட்டிலே நலிந்துகொண்டிருப்பவர்களுக்குத்தான், பஞ்சசீலப் பண்டிதர், ஏக இந்தியப் புதல்வர் நேரு, உள்ளம் உருகி அள்ளிக் கொடுத்திருக்கிறார்.

வெள்ளத்தால் உள்ளம் உடைந்து தவிக்கின்ற மக்களுக்கு எக்காலத்தும் ஓடிச்சென்று உதவி அளிப்பது இயற்கைதானே! அவர் அள்ளிக்கொடுத்ததில் தவறென்ன கண்டாய் எனவும் வினவக்கூடும், சிலர்.

வெள்ளத்தால் அல்லல்களைத் தாங்கித் தவிக்கின்ற மக்களுக்கு— உள்ளம் உடைந்து மீண்டும் வாழ வகையும், வழியும் பிறக்குமா என்ற எண்ணத்திற்கிடையே உயிரை ஊசலாட விட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு 'இதோ, கவலையை விட்டொழியுங்கள் நான் காப்பாற்றுகிறேன்' என்று வெள்ளிக் காசுகளை அள்ளிக் கொடுத்திலே தவறில்லைத்தான்; தவறெனக் கூறினும், அவர்களைக் குறைமதி படைத்தோர் என்ற பட்டியலில் சேர்க்கவேண்டியதுதான்.

ஆயினும், பண்டிதர் நேரு கொடுத்த உதவியைக் காண்கின்றபோது, அரியலூர் இரயில்விபத்து நம் கண்ணெதிரே காட்சியளிக்காமல் போகாது. அரியலூர் இரயில் விபத்திற்கும், அஸ்ஸாமின் வெள்ள விபத்திற்கும் என்ன உறவு? ஏன் அந்தப் பழங்கதை எனக் கூறலாம், சில அவசர முடிவு கொள்வோர்!

அரியலூர் இரயில் விபத்தைக் கண்டு கலக்கமடையவில்லை நேரு; அலறித் துடித்து ஓடுங்கள்; உதவி பல தேடுங்கள் என்றும் தன் நேரடி வாரிசுகளுக்கு, பஞ்சசீலப் புத்திரர்களுக்குப் புத்திமதிகளைக் கூறவுமில்லை; ஆறுதல் வார்த்தைகளுக்குக் கூடப் பஞ்சமாகிவிட்டது, பஞ்சசீலம் பேசி வரும் பண்டிதர் பெருமகனுருக்கு!

நாடு பற்றி எரிந்தபோது புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்த ரோம்நாட்டு மன்னனைப் போல, அரியலூர் இரயில்விபத்தில் சிக்கிப் புழுவெனத் துடித்து

ஏ. கலைமுகிலன்

உயிர் மாண்ட மக்களைப்பற்றி கவலையேதும் இல்லாதவர்போல் 'குளு குளு' வாசம்தேடி இமயமலைச் சாரலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த நிலையையும்; இன்று அஸ்ஸாமின் வெள்ள விளைவு கேட்டு உள்ளம் உருகி, வெள்ளிப் பணத்தை அள்ளிக் கொடுத்துள்ளதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்!

"இனத்தை இனம் காக்கும்; என்ற பழமொழி எந்த அளவிற்கு மெய் என்பதை அறிய முடிகிறதல்லவா—பண்டிதரின் நிலையைக் காணும்போது.

'வடக்குத் தெற்கு என்று இடக்குப் பேசித் திரிபவர்கள் இவர்கள்' என்று முடக்குவாதம் புரிகின்ற நேருவின் நேரடி வாரிசுகளும், பண்டிதரின் பறைகேட்டுப் பாய்ந்தெழுகின்ற பஞ்சசீலத் தம்பிரான்களும் இதற்கென்ன பதில் கூறுவர்?

நாம்தான் வடக்கு, தெற்கு என்ற பாகுபாடு கொண்டவர்கள் என்பதை காங்கிரஸ் தோழர்கள் கூற்றுப்படி ஒப்புக்கொள்வோம், வாதத்திற்காக.

பண்டித நேருவே பிரித்துக் காட்டிவிட்டாரே, வடக்குவேறு, தெற்குவேறு என்பதை! அன்று அரியலூர் இரயில் விபத்தைக் கேட்டும் கதிகலங்காத நேரு— ஆறுதல் வார்த்தைகள் கூட கூறாத நேரு—நெஞ்சம் துடிக்காத நேரு, அஸ்ஸாமின் வெள்ளப் பெருக்கைக் கேட்டவுடன் உள்ளம் உடைகிறார்; புழுவெனத் துடிக்கிறார்; ஓடுங்கள், ஓடுங்கள், முடிந்த உதவிகளைத் தேடுங்கள், தேடுங்கள்!' என்று தன் பஞ்சசீலப் புத்திரர்களுக்கு உத்தரவு பிறப்பித்தது மட்டுமல்ல, ஒரு இலட்சம் ரூபாய்களை வேறு வாரிக்கொடுத்திருக்கிறார்—ஏன்?

அங்கே வாடி வதங்கி, வெள்ளத்தால் வீடுவாசல் இழந்தவர்கள் தம் நாட்டைச் சார்ந்தவர்கள்; வடநாட்டைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தால் கண் திறந்தது; கவலை பிறந்தது; கருணை வழிந்தது.

ஆனால், அரியலூர் இரயில் விபத்து? தென்னகத்தில் — திராவிடத்தில் ஏற்பட்டது, நமக்கென்ன, என்று குளுகுளு தேடி ஓடினார்!

ஏகபாரதம் பேசித் திரிவோரே! ஏகபாரதம் என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்கள்; கற்பனைக் கனவுகள் என்பதை நேருவின் பாரபட்சமான இச்செயல் மூலமேனும் அறிவீர்களா! அறிந்தேனும்—தன் கையே தனக்குதவி என்பதை உணர்ந்தேனும் நம் தாயகம் மீட்கத் துணிவீரா?

கொங்குநாடும் செந்தமிழும்

(மு. சின்னச்சாமி)

"சோழ நாடு சோறுடைத்து" "பாண்டிவளநாடு முத்துடைத்து" "சேரநாடு வேழமுடைத்து" ஆனால் நம் கொங்கு நாடு எங்கு சென்றது? இந்நாடுகளில் புலவர்களையும் அவர்களைப் போற்றிய புரவலர்களையும் நமக்கு ஈந்தது தென்னவன் திருநாடான பாண்டிய வளநாடே. வளமார்ந்த செந்தமிழை வளப்படுத்த சங்கங்கள் நடத்தியவனும் அத்தென்னவன் தான். தன் உயிரினும் மேலாக, ஏன், தாயினும் மேலாகத் தமிழைப் போற்றியவன் பாண்டியன் மட்டுமே எனில் அது சாலவும் பொருந்தும். பொதுவாகக் கூறின் பாண்டியன் மடியிற்றவழ்ந்தது பண்பார்ந்த செந்தமிழ். எனவே முதற்கண் அத்தென் பாண்டித் திருநாட்டுக்கு நமது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொண்டு நமது முதற் பொருளுக்குச் செல்வோம்.

"அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்,
இந்தநாள் வந்துநீ நொந்தெனை
அடைந்தாய்
தலைதனைக் கொண்டுபோய் தம்பி
கைகொடுத்து,
விலைதனைப் பெற்று உன்வறுமை
நோய்களையே"

அவனோ மன்னவன். நாட்டைத் துறந்து காட்டில் வாழ்கின்றான். அவனுக்கே உண்ண உணவில்லை. இந்த நேரத்தில் தமிழ் கற்றவன் என்பதற்காகத் தன் உயிரைக் கொடுத்துப் புலவனைக் காக்கத் துணிகிறான் வள்ளல் குமணன். இதுமட்டுமல்ல. இன்னும் எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் தரலாம்.

கொங்கு நாடு தற்பொழுதுள்ள சேலம், கோயம்புத்தூர், நீலகிரியில் ஒரு பகுதி ஆகியவைகளைக் கொண்டது. இந்நிலையில் பண்டு நம் செந்தமிழ் எந்நிலையில் இருந்தது? இருக்கின்றது, எனப் பார்ப்போம்.

பாண்டிவள நாட்டில், சேர நாட்டில், சோழ நாட்டில் நம் அரிய மொழி வளர்க்கப்பட்டது என்றால், கொங்கில் வளரவில்லை என்பது பொருளல்லவே? அளவற்ற அறிஞர்கள், புலவர்கள் அவ்வப்போது தோன்றி நம் அருமை மொழிக்கு நீரூற்றி வளர்த்தனர். கொங்கு வள்ளல்கள் அதற்கு உரமிட்டனர்.

பெண் குலத்து மணிவிளக்கு ஔவை தோன்றியது எங்கே? சேரன் திருநாட்டில் — வாழ்ந்தது எங்கே? புகழ்பெற்றது எங்கே? அனைத்துமே கொங்கு வள்ளலான அதிகமானிடம்தான். தான் உண்டாலும் நெடுநாள் வாழலாம். ஆனால் தன்னால் மிகுந்த பயன், என்றுமே அழியாத செல்வம் நாட்டுக்கு இல்லை என எண்ணிப்பெண்பாற்புலவர் ஔவைக்குத் தான் பெற்ற அரிய நெல்லியை ஈகின்றான். என்னே அவன்கொடை! மொழிப்பற்று எத்தன்மைத்து?

கொங்குவேளிர் என்ற பெரும் புலவரின் நூலாகிய "பெருங்கதை" ஒன்றே இந்நாட்டில் செந்தமிழ் செம்மையான முறையில் வளர்க்கப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாகுமே? அவர்தம் இயற் பெயர் குலபெயராகிய வேளிர். கொங்கு நாட்டில் பிறந்ததற்காகத் தன்பெயரையே "கொங்கு வேளிர்" என மாற்றிக்கொண்டார். என்னே அவர்தம் நாட்டுப்பற்று.

கொங்கு மன்னர்கள் வள்ளல்கள் எனப் பார்த்தோம். தமிழ் வளர்த்தவர் எனக்கண்டோம். இருப்பினும் அவர்தம் பெயர்கள் மற்ற மன்னர்கள் பெயர்களைப் போல்பயிலப்படாமைக்குக்காரணம் என்ன? மற்ற அரசர்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தமையால் தான் அவர்தம் பெயர்கள் அடிக்கடி ஏடுகளில் குறிக்கப்பட்டன. ஆனால் நமது கொங்கு மன்னர்கள் போரின்றி அமைதியான முறையில் தம் வாழ்நாட்களைக் கழித்தனர். அதற்காகத் தமிழ் வளரவில்லை அந்நாட்டில் என்பதா? சிறந்த முறையில் இன்றும் வளர்கின்றது.

மேனாட்டறிஞர் விரும்பிக் கற்ற நம் செந்தமிழ். திராவிட மொழிகள் பன்னிரண்டினுள் தலைசிறந்த மொழியான தமிழ்மொழி இடைக்காலத்தில் தன் நிலையிலிருந்து தாழ்நிலை எய்திற்று. அந்நிலையிலிருந்து இன்னும் மீளவில்லை. காரணம் என்ன?

பிற மொழிச் சொற்களைக் கலக்கும்போது தமிழின் தூய்மை கெட்டுவிடுகின்றது. ஆம்! சமஸ்கிருதத்தை மட்டுமல்ல, பிற மொழிகள் எதுவாயினும் சரி, அனாவசியமாகக் கையாண்டால் நமது தமிழ் மொழிக்கு நன்றன்று. அதற்காகப் பிற மொழிகளைச் சேர்க்கமாட்டோம் என்பது பொருளல்ல. அவ்வாறு சேர்க்காவிடில் மொழியின் வளர்ச்சி குன்றிப் போகுமே! ஆங்கில மொழி, வளங்கொண்ட மொழி. உலகின் கண் அதிக மக்களால் பேசப்படும் மொழி. அறிவியலில் ஆக்கங்கொண்ட மொழி. இம்மொழி, தேவைப்பட்டபோது வேற்று மொழிச் சொற்களைக் கையாண்டது இதன் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த காரணமாகும்.

ஆனால், தமிழ்மொழி அந்த நிலையில் இல்லை. இரவல் வாங்கித்தான் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்ற தேவையை — அவசியத்தை அறவே அகற்றி நிற்கும் பெற்றி பெற்றது தமிழ் மொழி ஒன்றேதான். இன்றுங் கூடக் கொங்கு நாட்டிலும், ஈழ நாட்டிலும் தனித் தமிழ்—பிற மொழிக் கலப்புச் சிறிதுமின்றிப் பேசப்படுவதைக் காணலாம். **வடமொழியின் வாடை அதிகமாக வீசாத இடங்களில் கொங்கு நாடும் ஒன்று** எனக் கூறின், அது மிகையாகாது.

கடல் கடந்த நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்திய தமிழ் — இன்று தான் பிறந்து வளர்ந்த பொன்விளையும் நன்னாடாம் நம் அருமைத் தென்னாட்டில் கூட ஆட்சி செலுத்தமுடியாது திகைக்கின்றது. ஏன் இந்த நிலை? நமது ஆளுங்கட்சியினருக்கு அறிவில்லையா? ஏன் இல்லை? நிறைய இருக்கிறது. ஆனால் வடக்கின் விரோதத்தை ஏற்படுத்திவிடுமே என அஞ்சுகின்றனர்.

இமயம் முதல் குமரி வரை ஒரு குடைக்கீழ் ஆண்ட மூவேந்தர் இனமெங்கே? கடல் கடந்து கலமேறி வாணிபம் செய்த கன்னித் தமிழர் இனமெங்கே? இமயத்தில் கொடி நாட்டி கனக விசயனைக் கல் சுமக்க வைத்துக் கண்ணகிக்குக் கோயில் கட்டிய சேரன் செங்குட்டுவன் இனம்

எங்கே? வந்தவரை எல்லாம் வருக! வருக!! என வரவேற்று வாழ்வளித்த தீந்தமிழர் திறனெங்கே? இதையெல்லாம் எண்ணினால் மட்டும் போதாது. ஏழை என்ற கல்லில் அறிவு என்ற கத்தியை இன்னும் கூர்மையாகத் தீட்டுங்கள். எடுங்கள் அறிவு என்னும் ஆயுதத்தை புறப்படுங்கள் போருக்கு. விடுதலை அடைந்தே தீருவோம்.

பழித்துக் கூறினன் என்ற சொல் கேட்டதும் போருக்குச் சென்றான் செங்குட்டுவன். நாமும் அவன் இனம்தானே. ஏன் இன்னும் இந்த அடிமைத்தனம். ஆயிரமாயிரம் கோடிகள் அங்கே செலவு செய்யும்போது அதைப் பார்த்தும் பாராதவர்போல் இருப்பதற்கு நாமென்ன அறிவிலிகளா?

மொழிப்பிரச்சினை, இன்று முதற் பிரச்சினையாக உள்ளது. அரசியல் பிரச்சினைகளில் கலக்காதவரும் இதில் கலக்கின்றனர். இன்று இந்தி நம்மீது திணிக்கப்படுகிறது. இந்தி என்ன வளங்கொண்டது? துளசிதாசர் இராமாயணம் தவிர வேறு என்ன உண்டு அம்மொழியில். எல்லாம் இரவற் சொற்கள். இந்நிலையில் அம்மொழியைப் பயன்படுத்துவோமானால் என்ன முன்னேற்றம் காணமுடியும்? இனி மேலாவது அம்மொழிக்கு நம்மவர் இடம் கொடுக்கலாகாது என மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்மொழி வளர்ந்து செந்தமிழின் நறுமணம் திக்கெங்கும் கமழ வேண்டும்; சீரும், சிறப்பும் பெற்று விளங்கிய நம் தமிழ்மொழி, இன்று சீரிழந்து, கோலிழந்து, இருக்க ஓர் இடமின்றித் தவிக்கின்றது. அதனைச் சீர்படுத்தி சிம்மாசனத்தில் ஏற்றுவது நமது கடமை; தமிழ்மொழி புகழடைந்து, செந்தமிழின் நறுமணம் கொங்குநாடெங்கணும் பண்டைய நாள்பரவும் நாள் வெகு தூரத்திலில்லை.

"மலையீந்தான் பாரிவள்ளல்
மாத்தமிழ் போற்ற
தலையீந்தான் நற்குமணன்—வாழ்வின்
நிலையோர்ந்து நெல்லிதனைத் தானீந்தான்
நல்லதியன் ஒல்லையில் தந்தான் உயிர்"

நம் அருமைத் தமிழுக்கென நம் முன்னோர் எத்தனை ஈன்றனர். நீர் எதனை ஈயப்போகின்றீர்?

வாழ்க செந்தமிழ் வளர்க அதன் புகழ்!!

★

வள்ளுவர் கண்ட பெண்

—(இளங்குமரன்)—

மாலை நேரம், கதிரவன் தன் கதிர்களாகிய வாயினால் பகற் பொழுதை உமிழ்ந்து, கவின்மிகு இவ்வகன்ற ஞாலத்தைப் பலருக்குத் தெரியும்படி செய்கிறான்—மீண்டும் அப்பகற் பொழுதை விழுங்கியதைபொப்ப மாலைக் கதிரவன், மேலைக் கடலில் போய்க் கலந்திடும் நேரம் — சோலையில் உள்ள மரங்கள் அந்தி நேரத்தை வரவேற்றுத் துயில் கொள்ளும் வேளை—தாய்ப்பறவைகள், தம் குஞ்சுகளை நினைத்து உள்ளத்தில் அன்பு சுரக்க, தாம் பெற்றவைகளைக் காணவேண்டித் தம் கூடுகளைச் சேருகின்றன; கறவை ஆக்கள் தம் கன்றுகளை எண்ணித் தொழுவமாகிய மன்றங்களில் வந்து கூடுகின்ற இத்தகையதோர் மாலைக் காலத்தில், கவின்நிறைப் பூஞ்சோலை ஒன்றில் தலைவனொருவன், தென்றலின் குளிர்ந்த இனிமையில், சுற்றுப்புற அழகிலீடுபட்டு, தனிமையை நுகர்ந்துகொண்டிருந்தான். ஏதோ ஓர் அரவம் எழவே, திரும்ப வந்தான் இப்புற உலகிற்கு—நினைவுலகத்திலிருந்து. அங்கு தனது தோழிகளை விட்டுப் பிரிந்துபட்ட தலைவியொருத்தி—மருளும் விழியோடு நிற்கக்கண்டான். யாருமிரார் என எண்ணி, தன்னை மறந்தவளாய் வந்தவள், அங்கிருந்த தலைமகனைக் கண்டதும் திடுக்கிட்டாள். ஒருகணம் அவரை ஏறிட்டு நோக்கினாள். மறுகணம் வந்த சுவடு தெரியாது மறைந்துவிட்டாள்.

ஆனால், அவளைக் காணப்பெற்ற தலைவனது உள்ளமோ துள்ளியது—அந்த ஒரு கணத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியினால். அவன் சிறுகச் சிறுக, அப்பேரழகியின் உறுப்புக்களை நினைவிற்குக் கொண்டுவந்தான்—உள்ளம் களித்தான். அவனது நெஞ்சினில் நிகழ்ந்தவைகளை, வள்ளுவர் தனது குறளில் பாடல்களாக உருவாக்கியுள்ளமையை இவண் நோக்குதும்.

அவளைக் கண்ணுற்ற தலைவன் 'எத்தகைய அழகுடைய பெண்? அவள் பெண்தானோ! அல்லது அழகிய மயிலோ! ஒருகால் கற்பனையுலகப் பெண்ணாக இருக்கலாமோ? இவற்றினையறியாது என் நெஞ்சம் மயங்குகிறதே'! என்று எண்ணலானான்.

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ
கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"

அவர், அவளது எழிலை எழுத்துவடிவில் காட்ட இயலா நிலையைப் பற்றியும், அது காரணமாகத் தன் உள்ளத்தே எழுந்த வருத்தம் பற்றியும் 'அணங்குகொல்' என்றார். மேலும் தன் உள்ளம் அவளிடம் சென்ற காரணம் பற்றியும், அவள் தன் எதிர்நின்று தன்னை ஏறிட்டு நோக்கியது பற்றியும் எண்ணி, 'மாதர்கொல்' என்றும் கூறினார்.

பின் அவளது நெற்றியைப்பற்றிச் சிந்திக்கிறார். அவரது வீரம் உடன் அவருக்கு நினைவு வருகின்றது. போர்க்களத்திற்கு வந்து வள்ளுவரோடு போரிடும் வாய்ப்புக் கிடைக்காதவரும், வாய்ப்புக் கிடைத்தவர்கள் சொல்லக்கேட்டு அஞ்சுவதற்குக் காரணமாகிய, சிறப்புப்பொருந்திய அத்தகைய ஆற்றல், இப்பெண்ணின் ஒளி நிறைந்த நெற்றிக்கு ஆற்றாது அழிந்துவிட்டதென்று,

"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே
ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு"

இக்குறளில் நமக்கு விளக்குகிறார்.

அடுத்து, அவர்க்கு அவள் தன் மார்பகங்களின் மேல் துகிலொன்றைப் போர்த்தியிருந்தது நினைவுக்கு வர, அது; மதயானையின் மேல் இட்ட முகபடாத்தினை ஒத்திருந்ததாம்.

"கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்"

யானையின் கண்களை மறைத்து முகபடாம் அணிவிக்கப்படுவதால் 'கட்படாம்' என்றார். தவிர, அவர் வெகு அழகாக, அவளது நாணத்தை, "நாணுடை மகளிர் இயல்பு மார்பகத்தினைத் துகிலான் மறைத்தல்" என்னும் கருத்துப் படிக்கூறியுள்ளதைக்காண்க. அவளது துகிலாடை, அவற்றின் வெம்மையும், பெருமையுங்கண்டு, இத்தகைய ஆற்றலுடையன இனி எப்போதும் சரியாதெனக் கருதி, 'படாமுலை' என்றார். தவிர, பிறரைக் கொல்லக்கூடிய மதயானையின் முகபடாம் (அதன் கண்களை மறைத்து) கொல்லாமற் தாக்குகின்றதைப்போல், ஆடவரது உணர்ச்சிகளைத்தூண்டிவிட்டு,உயிரைக் கொடுமை செய்யாவண்ணம் துகில்(மார்பினை மறைத்து) காக்கிறதுஎன்கிறார். என்னஅழகாக மார்புத் துகில் பற்றித், தலைவியின் மார்பக அழகோடு பொருத்திக் கூறுகிறார் பாருங்கள்!

அவளது இடையழகை நினைவிற்கு கொணர்ந்து காண்கிறார்—விளக்குகிறார். அடடா! இவளுக்கு இடை இருக்கிறதா இல்லையா? எனவும் ஐயுறுகிறார். அவர், தான் பெற்ற ஐயத்தினால்,

"அனிச்சப்பூக்கால் களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படா பறை"

என்கிறார். அனிச்சம் ஒரு வகையான பூ; தற்காலத்தில் அவ்வித மலரிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அது மிக மெல்லிய மலர் எனக் கூறப்படுகிறது. அதை நுகர்ந்தாலே வாடிவிடும் தன்மையுடையதாம். அவ்வளவு மென்மையானது. அத்தகைய மென்மையான மலரின் காம்பு எவ்வளவு மென்மையாக இருக்கும் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம் அல்லவா?

இங்குதான் வள்ளுவரது சுவையை நாம் உணர முடிகிறது. பாருங்கள்! இந்த அனிச்ச மலரை அவள் அதன் மென்மை கருதாது (முகிழ்) காம்பு களையாமல், தலையில் சூட்டிக் கொண்டாளாம்; அவ்வளவுதான். அவளது இடை, பாரம் தாங்காமல் முறியும் நிலைக்கு வந்துவிட்டதாம். அத்தகைய சிற்றிடையாளாம் அவள். அவ்வாறு முறிந்துவிடின், அவளுக்கு இறந்தார்க்குரிய நெய்தற்பறையே ஒலிக்கப்படுமாம்; நல்ல பறைகள் ஒலிக்காவாம். பாருங்கள்! வள்ளுவரது பெண்ணினை. மக்கட்குரிய சாக்காடும், அதன்பின் பறையொலித்தலையும் தலைவியின் நுசுப்பின்மேல் ஏற்றிக் கூறுகிறார் வள்ளுவர்.

இப்போது அவருக்கு அவளது பாதத்தினைப் பார்த்த நிகழ்ச்சி அடுத்து நினைவுக்கு வர, அங்கும் அவர் அனிச்ச மலரை நினைவுக்குக் கொண்டு வருகிறார்—அவளது மெல்லிய சிவந்த அழகிய பாதங்களைப் பார்க்கிறார். அவற்றின் மென்மையை அறிகிறார். அடாடா! இவள் பூமியில் நடக்கலாமா! இவ்வளவு மென்மையான பாதத்திற்கு அனிச்சமும், அன்னப் பறவையின் தூவியும், நெருஞ்சிப் பழம் (முள்) போல் வருத்தம் செய்யாதிருக்குமோ!,

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்."

என ஏங்குகின்றார்.

அவருக்கு, தலைவியை நினைக்குந்தோறும், அனிச்சத்தின் மென்மையே கண்முன் தோன்றுகிறது. தமது தலைவியின் உடலே அனிச்சத்தினை விட மென்மையானது எனப்படுகிறது. அனிச்சம் அதை மறுப்பதுபோல் அவருக்குத் தோன்றுகிறது. உடனே கூறுகிறார்— அனிச்சத்தை நோக்கி, பயப்படாதீர்கள்! அவர் கோபமாகக் கூறவில்லை—அமைதியாக வாழ்த்துகிறார்.

"அனிச்சமே! நீ வாழ்வாயாக! உண்மையில் நீ எல்லாப் பூக்களையும் விட இயற்கையான மென்மையையுடையதாயிருக்கின்றாய்! ஆனால் எம் தலைவி இருக்கின்றாளே, அவள் உன்னிலும் மென்மை வாய்ந்தவள் என்பதை அறிவாயாக" என்கிறார். இதன் மூலம், வள்ளுவர் தாம் கண்ட பெண்ணின் மென்மையை விடக், குறைந்த மென்மை வாய்ந்ததுதான் அனிச்சம் என்கிறார்.

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம் வீழ் பவள்"

எனக் கூறி, அனிச்சத்தினைப் புகழ்தல் போல் இகழ்கின்றார் வள்ளுவர். மேலும் 'இனி, யானே மெல்லியளென்னும் செருக்கினையொழிவாயாக' என மறைமுகமாகக் கூறுகிறார்.

இதுகாறும் தனித்தனியே உறுப்பு உறுப்பாகக் கூறிவந்தவர், இனி முழு உடலைப்பற்றியும் கூறுகிறார்.

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த் தோளவட்கு"

ஆம்! எம் தலைவி மூங்கிலழகினையொத்த தோள்களையுடையவள். ஆனால் உடலின் நிறமோ, தளிர் போன்றது. பற்கள் முத்துக்கள் போல் இருக்கும்; இயல்பாகவே நறுமணம் வீசும் உடல் உடையாள்! அவள் கண்களோ வேலாகவே இருக்கும் என்கிறார்.

"கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்
தோள்பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது"

இப்போது உங்கட்கு நம்பிக்கை வந்துவிட்டதல்லவா! அவர் கண்களுக்கு விருந்தளிக்கும் காரிகை, அழகிய தோளையும், உடலையும் மட்டும் உடையவளல்ல; இளமையையும் உடைய எழில்மிக்காள் என்பது! அவளணிந்துள்ள அணிகலன்மேல் அவர் பார்வை கடைசியாக விழுகிறது. அவர் தான் புறத்துறுப்பில் அணியப்படும் அணிகளையே விரும்பாதவராயிற்றே! உடனே சொல்கிறார்—இவளுக்கு இந்த அணிகளை ஏன் அணிவித்திருக்கின்றார்கள்? புறத்தே பெண்மானையொத்த மட நோக்கினையும், அகத்தே நாணத்தையும் ஆகிய இவ்விரு நல்லணிகளையும் இயல்பாகவே அணிந்துள்ளாளே! பின் வேற்றுமையுடைய அணிகளை அணிதல் என்னபயன் கருதி? என வினவுகின்றார்.

"பிணையேர் மடநோக்கும் நாணும்
உடையாட்
கணியெவனோ ஏதிலதந்து"

பெண்களுக்கு நாணமும், மடமும் அணிகள் என்று கூறி, எப்படி இன்றைய நாகரிகப் பெண்களைத் தம் தலைவி மூலமாக வள்ளுவர் கண்டிக்கிறார் என்பதைப் பாருங்கள்—மற்றும் வேறெவ்வித அணியும் வேண்டாம் இவையிரண்டைத் தவிர, என எவ்வளவு துணிவாகக் கூறுகிறார்.

வள்ளுவர் தம் குறள் வாயிலாக —தலைவன் கண்ணுற்ற தலைவியினது இயல்பான அழகினையும், மெல்லியல்புகளையும் கூறியதை நாமும் கண்டு இன்புறுவோமாக.

★

இரு பிணங்கள்!

"அப்பா!... அ...ப்...பா!!" என ஒரு குரல் எங்கள் வீட்டில் ஒலித்தது. உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் ஒரு உருவம் தன்னால் பேச முடியாத நிலையிலும், அவ்வொலியை மிகமிக மெல்லிய குரலில் ஒலித்துக்கொண்டிருந்தது.

"என்ன தங்கம்? என்ன வேண்டும்?" எனக் கேட்டுக்கொண்டே, கொல்லைப்பக்கம் போயிருந்த என் தந்தையும் விரைந்து வந்து, அவ்வுருவத்தின் அருகே அமர்ந்தார். அவ்வுருவம் வேறு யாருமல்ல. என் உடன்பிறந்த அக்காள்தான்.

"அப்பா! இனி நான் பிழைக்க மாட்டேன். எனக்கு வந்த நோய், இவ்வளவு அதிகமாக என்னைக் கெடுத்துவிடும் என நான் எண்ணவேயில்லை. இனி உங்களோடெல்லாம் நான் இருக்கமுடியாது-- அப்பா!... அதனால் என் மகள் செல்லத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அவளை நல்லமுறையில் வளர்த்து, நம் தம்பி முருகேசனுக்கே கட்டிவைத்து விடுங்கள் அப்பா! வேறு இடத்தில் கொடுத்தால், அங்கு அவள் மிகவும் துன்பப்படநேரிடும். அவள் அப்படித் துன்பத்தால் வாடும்பொழுது—ஆறுதல்கூற நானும் இல்லை. அவரும் (என் கணவரும்) இல்லை. இனி நீங்கள்தான் அவளுக்கு அம்மாவும் அப்பாவும்.

அப்பா! என் ஒரே குலக் கொழுந்தை, என் உயிரை உங்களிடம் ஒப்படைக்கிறேன் அப்பா! இந்தச் சுமைமிக்க பொறுப்பைச், சிரமத்தைத் தாங்கிக்கொண்டு எப்படியும் நிறைவேற்றுங்கள் அப்பா! அவளைக் கண்கலங்க விடாதீர்கள். அவளை நான் காப்பாற்றுவேன் என்று உறுதி கூறுங்கள் அப்பா! அப்படியானால்தான் என் மனம் அமைதிபெறும்"—என்று விம்மி விம்மி அழுதாள் என் அக்காள். அவள் சிந்திய கண்ணீரால் தலையணையின் மேற்பரப்புப் பாதிக்கு மேல் நனைந்திருந்தது. அருகில் இருந்த நானும் என் அப்பாவும் செயல் மறந்திருந்தோம்.

"சரியம்மா! நீ செல்லத்தைப் பற்றி ஒரு கவலையும் கொள்ளாதே! அவளை நான் நல்லபடியாக வளர்த்துக் காப்பாற்றுகின்றேன் அம்மா!" என்று என் அப்பா ஆறுதல் கூறினார்.

என் அப்பாவின் உறுதிமொழி கிடைத்ததும் என் அக்காள் இலேசாகச் சிரித்தாள். அவ்வளவுதான், பின்னர் எப்போதுமே சிரிக்காத நிலையை அடைந்துவிட்டாள். ஆம், என் ஒரே அக்காள், இறப்புலகில் இன்பம் காணச் சென்றுவிட்டாள்.

❦

சுமார் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் ஒருநாள், அந்திப்பொழுதில் நடந்த நிகழ்ச்சி இது. என் அக்காவின் முடிவைக் காட்டுவதுபோல் அன்றைய பகலவனும், மேற்குத் திசையில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தான்.

அப்பொழுது நான் பத்து வயதுச் சிறுவன். என் அக்கா மகள் செல்லம் ஆறுவயதுச் சிறுமி. இருவரும் துவக்கப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தோம்.

தென்னவன்

என் அக்காவின் நினைவாக—எங்கள் வீட்டின் முற்றத்தில்—ஒரு பூவரச மரத்தின் கிளையை நட்டு வைத்தார்—என் அப்பா!

காலம் வளர்ந்தது. நாங்களும் அதனுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தோம். அதைப் போலவே எங்கள் வீட்டுப் பொருளாதாரமும் நன்முறையில் வளர்ந்தது. எங்களின் செழிப்பைக் காட்டுதற்குச் சான்றாக, எங்கள் பூவரச மரமும், கப்பும் கவருமாய்க் கிளைகளோடு கிளைகள் பின்னிப் பிணைந்துகொண்டு, மிகச் செழிப்பாக — பசுமையைப் போர்த்திக் கொண்டு படர்ந்து நின்றது.

காலம் எனும் வஞ்சகன் இந்த உலகில் நிகழ்த்தும் விந்தைச் செயல்கள்—ஒன்றா, பத்தா, நூறா? பல ஆயிரம் ஆயிற்றே! உலகில் உயர்ந்தவனைத் தாழ்ந்தவனாய் ஆக்குகின்றான். தாழ்ந்தவனை உயர்ந்தவனாய் ஆக்குகின்றான்.

"என்னை மிஞ்சியவன் யார்?" என வீராப்புப் பேசும் வீணர்களை ஒரு நொடியில் இறப்புலகுக்கு அனுப்புகின்றான். தென்றலையும் இனிமையையும் தருகின்றான். அதையே புயலாகவும் கொடுமையாகவும் மாற்றுகின்றான். மக்களை உய்விக்கும் பயிர் வாழ, அளவான மழையையும் தருகின்றான். அப்படித் தரும் அந்தக் காலமே இன்னொரு சமயம் பேய்மழையைப் பெய்வித்து மக்களை அழித்தும் விடுகின்றது—வெள்ளத்தால்.

ஆட்சியாளர் சீராக ஆளாத காரணத்தால், நம்மிடையே சிலரை, நான்கு அடுக்கு மாடியில் வாழ வைக்கின்றது. சிலரைப் பிச்சை எடுத்துக் குடித்துவிட்டு, வானத்தைக் கூரையாகவும், தரையைப் பஞ்சணையாகவும்கொண்டு, தவளை, பாம்பு, எலி போன்ற உயிர்களுடன் உறங்கவும் வைக்கின்றது — சாலையின் ஓரத்திலே ஓடும் சாக்கடையின் அருகில்.

நாலடுக்கு மாடியை ஆக்கிய கலைஞனை கோழிக்குடிலில் குந்த வைத்து-அந்தக் கலைஞனது தோல் மூடிய உடலில்—எத்தனை எலும்புகள் இருக்கின்றன என்பதை எண்ணி வேடிக்கை நிகழ்த்துகின்றது—காலம்

நான்கடுக்கு மாடியில் வாழும் சீமான்களுக்கு — உழைப்பையும் அதன் வருத்தத்தையும் அறியாத சீமான்களுக்கு—தங்களது சன்னலுக்குக்கூட உயர்ந்த விலைத் துணிகளைத் திரையாகத் தொங்கவிட உதவுகின்றது. ஆனால் அத்துணியைத் தன் எலும்பினை முறித்து நெய்து கொடுத்த நெசவாளியைக் கந்தலை உடுத்திக்கொண்டு — கையால் தன் உடலைப் போர்த்திக் கொண்டு, கொடுமையான வாழ்வினை வாழச்செய்விக்கின்றது.

அரைகுறையாகப் பழங்களைப் பிழிந்து பழரசம் எடுத்துவிட்டு, அதைக் குப்பைக் குழியில் கொட்டும் சீமான்களது கழனியில் பாடுபடும் ஏழையைப் "பொக்குச் சோழ"த்தைக் காய்ச்சிக் குடித்துவிட்டு, நடைபிணங்களாகத் தோன்றும் பத்துப்பிள்ளைகளுடன் "பெரு

வாழ்வு" வாழ வைப்பவனும் இந்தக் காலமாகிய நயவஞ்சகன் தானே!

அந்த வஞ்சகனது உதவியினால் தான் கடந்த பத்தாண்டுகளில் எங்களது பொருளாதாரமும் உயர்ந்தது. அநியாய வட்டிக்குப் பணம் கொடுத்து, ஏழைகட்கு உதவும் "பெருந்தகையாளர்" என் அப்பா! இன்று எங்கள் வீடுதான் ஊரார் போற்றும் ஒரே பணக்கார வீடு. எங்கள் ஊரில்—என் தந்தைதான் நாட்டாண்மைக்காரர். அவர் இட்டதுதான் சட்டம்-அது நல்லதோ கெட்டதோ-அது வேறு விஷயம்.

நான் இப்பொழுது திருமணப் பருவத்தைப் பெற்றிருப்பதால், என் தந்தை, செல்லத்தை எனக்குத் திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கின்றார். ஊரே சொல்லுகின்றது—செல்லம் முருகேசனுக்கு (எனக்கு)த்தான் என.

"ஆனால்...?"

என் உள்ளம் அவளை விரும்பவில்லை. காரணம்: அவள் மிகுந்த கர்வம்கொண்டவள். யாருக்கும் அடங்காதவள். பணச் செருக்குடையவள். அவள் பொறாமையின் குன்று! பொய்யின் பிறப்பிடம்! ஆணவத்தின் மறுவடிவம்! சாதித்திமிரும் பணத்திமிருமே தன்னிரு கண் எனக்கொண்ட திக்குணம் படைத்தவள். சுருக்கமாகச் சொன்னால், அவளிடம் வள்ளுவர் கண்ட பெண்மையைக் காண முடியாது.

என் வீட்டில் என் தந்தைக்கு என்னைத் தவிர வேறு குழந்தைகள் கிடையாது. என் அம்மா நான் சிறுவனாக இருக்கும்போதே இறந்துவிட்டார்கள். ஆகவே என் அக்காவின் இறுதிக்கால வேண்டுகோளும் — எங்கள் வீட்டுப் பணமும்—என் அப்பாவின் குழந்தைப் பாசமும், செல்லத்தைக் கெடுத்துவிட்டது. இரக்கத்தை அவளிடமிருந்து போக்கிவிட்டது. அடக்கத்தை அவளிடமிருந்து பறித்துக்கொண்டது.

குழந்தை வளர்ப்பு ஒரு கலை. அந்தக் கலை பெண்டிருக்கே உரிய—உயர்ந்த கலை. ஆம் பெண்கள் தான், குழந்தைகளைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும், அணைக்க வேண்டிய போதில் அணைத்தும், வளர்க்கும் முறையறிந்து வளர்ப்பர். பணத்திமிரும், சாதித் திமிரும், சனாதனக் கோட்பாடும் கொண்ட என் அப்பா தானே — எங்கள் செல்லத்தை வளர்த்தார். அவரால் வளர்க்கப்பட்ட பெண் எப்படி இருப்பாள்?

அவளுக்கு எங்கள் வீடுதான் நாடு. எங்கள் ஊர்தான் உலகம். அவளுக்கு அவளேதான் பெரியவள்—அதாவது அதிகாரி.

இப்படிப்பட்ட ஒரு பெண்ணுடன் வாழ யாராவது விரும்புவார்களா? நானே கடந்த பத்தாண்டுகளாக, அவளது வளர்ச்சியை என் கண்ணாரக் கண்டுள்ளேன். இந்நிலையில் என் உள்ளம் அவளை மணம் முடிக்க ஒப்புமா? ஆகவே நான் அவளை என் மனமார வெறுத்தேன். ஆனால் அவள் என்னைத் தனது வருங்காலக் கணவன் என எண்ணிக்கொண்டு, எத்தனையோ தடவைகள் அதிகாரம் செய்திருக்கின்றாள்.

ஒன்றை விரும்பும் உள்ளம்தான் பிறிதொன்றை வெறுக்கும். ஒன்றை வெறுப்பதற்கான சூழ்நிலையைக் கண்ட உள்ளம் தானாகவே வேறொன்றை விரும்புதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளும். கசப்புத்தான் இனிமையின் பெருமையை உணர்த்தும். குட்டை இருந்தால்தான் நெட்டையை உணர முடியும்—இது தத்துவம்.

கொடுமைக்காரி செல்லத்தை வெறுத்த நான்—குணக் குன்று செல்லியைக் காதலித்தேன். "செல்லி"-ஆம், அவள் சேற்றிலே மலர்ந்த செந்தாமரை. குப்பையிலே கிடந்த மாணிக்கம்! கொஞ்ச நாளைக்கு முன் இறந்துபோன எங்கள் பண்ணைக்காரன் இராமனின் படைப்பு! அவனால் உலகினுக்குத் தரப்பட்ட பேசும் பொற்சிலை — அவன் இறந்தபின், தான் படித்த ஏழாம் வகுப்பிலிருந்து விடைபெற்றுக்கொண்டு — எங்கள் வீட்டில் தன் தாய்க்கு உதவியாக வேலை செய்து வருபவள். இராமன் இறந்த பின்னர் அந்தக் குடும்பம் எங்கள் பொறுப்பில்தான் இருக்கின்றது.

செல்லி உலகம் தெரிந்த பெண். கடமையைச் செய்யும் பொழுது அவள், கதிரவனையும் மிஞ்சிவிடுவாள். அவள் பருவத்தின் எழிலுக்குப் பிறப்பிடமாகத் தோன்றினாள். அடக்கத்தின் திருவுருவாய்க் காட்சி தந்தாள். உண்மையின் புகலிடமாய் விளங்கினாள். எல்லாவற்றிற்கும் மேலாக அன்பின் அடைக்கலமாகவே திகழ்ந்தாள். அவள் ஏழையின் மகள் அல்லவா! நல்லவனையும் நாசகாரனுக்கும் பணத்தை அறியாத குடும்பத் தோன்றல் அல்லவா! ஆகவே நான் அவளைக் காதலித்தேன். என் உளமார விரும்பினேன். அவள் என் இதயத்தில் அழிக்க முடியாத ஓவியமாய்ப் பதிந்துவிட்டாள். அவளை நான் மணம் முடித்துக் கொள்வதன்மூலம், நானே என் சீர்திருத்தக் கொள்கைக்கு, ஒரு சோதனையை உண்டாக்கிக் கொண்டு, வெற்றி பெற விரும்பினேன்.

*

அன்று எங்கள் ஊரில் ஒரே ஆரவாரம். மக்கள் எல்லோரும் புத்தாடை புனைந்து, புது மகிழ்வெய்தி ஆடி, ஓடி, பாடித் திரிந்தனர். நாட்கள் பலவாய்ச் சிரித்தறியாத மக்களிற் சிலர், அன்று சிரித்துப் பேசிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர். இதற்கெல்லாம் காரணம், எங்கள் ஊரில் உள்ள செல்லியர் அம்மனுக்கு, அன்றுதான் பொங்கல் விழா. எங்கள் ஊரிலுள்ள எல்லாச் சாதியினரும் ஒன்றாய்க் கூடிக் கொண்டாடும்பெருவிழா! "செல்லியர் அம்மனது கிருபையால்தான் மழையும், அதன் பயனால்தான் வேளாண்மையும் உண்டாகின்றது. பிழைப்பும் நடைபெறுகின்றது" என்பது அந்தப் பாமர மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. ஆதலால்தான் எங்கள் ஊரில் உள்ள ஆண்கள் எல்லோரும் தங்கள் பெயரைச் செல்லையா ஆகவும், பெண்களில் உயர் சாதியினர் தங்கள் பெயரைச் செல்லம்மாள் ஆகவும், கீழ்ச்சாதி எனப்படுவோர் செல்லியாகவும் இட்டு அழைத்துக் கொள்ளுகின்றனர்.

அன்று செவ்வாய்க் கிழமை இரவு. ஊர்முழுவதும் கோயிலில் கூடிவிட்டது விழாக்கொண்டாட. ஆனால் நானும் செல்லியும், முன் கூட்டியே பேசிமுடித்த ஏற்பாட்டின்படி எங்கள் வீட்டில் தங்கி விட்டோம்.

இரவில் பவனிவரும் விண்ணகத்து நிலாப்பெண், மேகத் திரையை விலக்கிக்கொண்டு வெளிக்கிளம்பி, மக்களின்பால் தன் கருணையைக் கொட்டுவதுபோல், மண் மங்கையின் மீது, தனது வெண்மை ஒளியைப் படரவிட்டாள். தரையில் வெள்ளித் தகடு பதித்தது போன்றிருந்தது--அந்த

இரவு நேரத்துத் தரை. ஊரெல்லாம் கோயிலிற் கூடிவிட்டதால், தெருவில் பேரமைதி நிலவியது.

அப்போது நான் செல்லியை அழைத்துக்கொண்டு, கொல்லைப் புறத்துக் கேணியின் பக்கம் சென்றேன்.

"செல்லி...! செல்லி! இங்கே வா!" என அவளை என் அருகில் அழைத்தேன்.

அவள் நாணத்துடன் தலை கவிழ்ந்த நிலையில் ஒரு ஓரத்தில் நின்றாள்—காலின் பெருவிரலால் நிலத்தைக் கிறிக்கொண்டு. நான் அவள் அருகிற் சென்று அவளது முகத்தை நிமிர்த்தினேன். அப்பொழுது அவள் மேனி சுட்டது. உதடுகள் நடுங்கின. பேச்சுத் தடுமாறியது — தள்ளாத கிழடு போல்.

"என்ன செல்லி பயமா? ஏன் நடுங்குகின்றாய்?"

"இல்...லை! இ...ல்...லை!"

"பின் ஏன் இவ்வளவு நடுக்கம்! காய்ச்சல் உள்ளவனுக்குச் சுடுவது போல் சுடுகின்றதே உன் உடல்."

"எனக்கு ரொம்பப்பயமாயிருக்கு. எசமான்! நம்மளை யாராவது பார்த்துட்டா?"

"அடபயித்தியமே! நடக்காததை நினைத்தா பயப்படுகின்றாய்? யார் பார்ப்பார்கள் நம்மை? யாரும் பார்க்கக்கூடிய இடத்துக்கா நாம் வந்துள்ளோம்? எல்லோரும் கல் கோட்டைக்குள்ளே மாட்டிக் கொண்டு தவிக்கும் கருங்கல் செல்வியை யில்லே பார்க்கப்போயிருக்காங்க! இந்தச் செல்லியையா பார்க்கப்போறாங்க! பார்த்தாயா உன் கள்ள மனசு துள்ளுது!

"ஆமா! என் உடல் மாத்திரம் சுடுகிறதுன்னு சொன்னீங்களே? உங்க உடல் மாத்திரம் ஐஸ் மாதிரி சில்லுன்னு இருக்குதாக்கும்? என் உடலைவிடக் கொதிக்குது! ஆமா, நீங்களும் ஏன் காய்ச்சல் வந்தவன் மாதிரி நடுங்கின குரலில் பேசுறீங்க?"

"சரிசரி அதெல்லாம் விடு! நான் உன்னிடம் ஒன்று கேட்கிறேன். நல்ல பதிலாகத் தருவாயா?"

"கேளுங்கோ! நல்ல கேள்வியா இருந்தா,நல்ல பதிலைத்தருவேன்!"

"செல்லி! எனக்குச் செல்லத்தைக் கட்டிக்கொள்ள விருப்பமேயில்லை. அந்த அடங்காப்பிடாரியை கண்டாலே எனக்குப்பிடிக்கவில்லை. அவளுடன் நானெப்படிக் குடும்பம் நடத்தமுடியும்?

"அப்போ வேறே யாரைக்கட்டிக் குவீங்கோ? உங்க அப்பா, உங்களை விட்டுடுவாங்களா? உங்க அந்தஸ்துக்கு ஏற்றாப்பலே, இந்த ஊரிலே வேறு பெண்ணே கிடையாதே! அதுபோலவே உங்க செல்லம்மாளுக்கும் சரியான மாப்பிள்ளையும் இல்லை!"

"அதற்காகப் பிடிக்காதவளோடு வாழணுமா?"

"இதை ஒங்க அப்பாகிட்டயில்லே கேக்கணும்!"

"அவரிடம் நாளைக்குக் கேட்கிறேன்; இன்னிக்கு நீ சொல்!"

"அப்படின்னா வேறே ஒரு பொண்ணு கண்டிப்பாய்ப் பார்க்க வேண்டியதுதான்,"

"உம்......அப்படி வா வழிக்கு! நான் முன்னாலேயே ஒரு பெண்ணைப் பார்த்திருக்கின்றேன்! சொல்லட்டுமா?"

"யார் அவ! எந்த ஊரு...?"

"இந்த ஊர்க்காரிதான். ஆனால் அவள் கொஞ்சம் குறும்புக்காரி!—என்றாலும் கெட்டிக்காரி! செல்வி! அவள் வெளியே வந்து நிலாவைப் பார்த்தால், அவளது முகத்தைக் கண்டு நாணி நிலவு சில சமயம் மேகத்திற்கிடையேமறைந்துவிடும்!

"ஐயயோ, அப்படின்னா, அவள் நிலாக் காலத்திலே வெளியே வந்தால் உலகம் இருட்டிவிடுமே!"

"பார்த்தாயா குறும்புப்பேச்சை! இன்னும் கேள் செல்லி! அவள், செவ்விதழ் மலர, சிரிக்கும் சிரிப்பைக் கண்டு, முல்லை மலர் கருகிவிடும். அப்படி அவள் சிரிக்கும் போது தெரியும் முத்துப் பற்களைக் கண்டு, மல்லிகைமொட்டு வெட்கப்பட்டு மலர்ந்துவிடும், தெரியுமா?"

"கவிதை பாடுகின்றீர்களா? எசமான்!"

"செல்லி! அவளது ஓசை கேளா நடையைக் கண்டு அன்னம் நாணி ஓடிவிடும். கரிய சடையைக் கண்டு பொறாமைப்பட்ட கருநாகம் கோபம் கொண்டு, "என்னைப் பழிக்கும் இந்தச் சடையைஉடையவளை ஒழித்து விடுகிறேன் பார்" என்று தன் சினத்தைக் காட்டிப் படம் எடுக்கும்! அவளது சின்ன இடைமைக் கண்டு வெட்கப்பட்டுத்தான் மின்னல் தோன்றியதும் மறைந்துவிடுகின்றது! தெரியுமா செல்லி?"

"உம்...! இன்னும்? அவளது சாயலைக்கண்டு மயிலும், பாடலைக் கேட்டுக் குயிலும், கண்ணைக்கண்டு கெண்டையும், கண்ணின் மிரட்சியைக் கண்டு மானும், பயந்து—நடுங்கி-வெட்கப்பட்டு ஓடிவிடுகின்றனவா? எசமான்! நான், அவள் யாருன்னு கேட்டால், அதைச் சொல்லாமல் நடை இடை, சடையென்று, உடலுறுப்புக் கதை வைக்கின்றீர்களே!"

"ஏ... அப்பா...ஆ! எவ்வளவு கோபம்! ஒரு பெண், இன்னொரு பெண்ணின் புகழைப் பொறுக்க மாட்டாள் என்பதைக் காட்டிவிட்டாயே கள்ளி! நான் பார்த்த பெண்ணின் பேர் தெரியுமா?

[அடுத்த இதழில் முடியும்.]

மதிப்புரை

"தையற் கலை"

கலைகளுள் தையற் கலையும் ஒன்று என்பதைப் பலர் அறியமாட்டார்கள். ஏதோகிழிந்ததையும், கிழியாமல் இருப்பதைக் கிழித்தும் தைப்பதை, போயும் போயும் ஒரு கலை என்று கூறுவதா எனப் பலர் கருதலாம். ஆனால், தையற்கலை ஒரு நுட்பம் வாய்ந்த கலை என்பதை அறியாதார்க்கும், அறிய விரும்புவார்க்கும் அறிவிக்கும் விதத்தில், தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் "தையற் கலை" என்ற பெயரோடு ஒரு இதழ் தொடக்கியிருப்பது காண மகிழ்கிறோம்.

தையற் கலையில் ஈடுபட்டிருப்போருக்கு மட்டுமன்றி, எல்லோருக்குமே, அதிலும் சிறப்பாகப் பெண் குலத்துக்கு இது மிக மிகத் தெரிந்திருப்பது இன்றியமையாத ஒன்று என்பதை நாம் எடுத்துக்கூறத் தேவையில்லை.

திங்களுக்கொரு முறை வெளிவரும் "தையற் கலை" எல்லா இல்லங்களிலும் இருக்கவேண்டிய ஒன்றாகும்.

சந்தாவிபரம்;

தனி இதழ் 20 காசு
ஆண்டுக் கட்டணம் 2—50

வெளிநாடு:

தனி இதழ் 0—25
ஆண்டுக் கட்டணம் 3—50

கிடைக்குமிடம்:—

"தையற் கலை"
132. புரசைவாக்கம் நெடுஞ்சாலை
சென்னை—7.

4-ம பக்கத் தொடர்ச்சி

என்னவாயிற்று என்றோ கவலைப்படுவதில்லையாம்! கட்டிடங்கள் கட்டுவதைப்பற்றிமட்டுமல்ல, சகல காரியங்களும், இதே அழகில் தானும்!!

‘சமுக நல போர்டு’ என்றால் என்ன? அது எதற்கு இருக்கிறது? அது என்ன செய்கிறது?—என்று யாரையாவது, கேட்டுப்பாருங்கள்! சரியான பதில் கிடைக்காது!! அந்தளவுக்கு இயங்கிவரும், இந்த அருமையான இலாகாவுக்கென அழிந்துவரும் தொகையோ பலகோடி!!!

சீர்த்திக்கொடி நாட்டப்போகிறது, கிராமப் பெண்களின் கண்ணுகை விளங்கப்போகிறது, சமுகத்திலேயே ஒரு சீர்திருத்த மாடமாகத் திகழப்போகிறது, சமுகத் துறையிலும் சர்க்கார் புகுந்து வேலை செய்கிறது என்றெல்லாம் அழகு மொழிகளால் அர்ச்சிக்கப்பட்டு, சீமான் வீட்டுச் செல்விகளின் ‘கூஜா’ போல ஆகிய இந்த இலாகா ஏன் இப்படியாயிற்றும் தெரியுமா? இதோ, கேளுங்கள்: மதிப்பீட்டுக் குழு சொல்வதை:

> **தீவிர உறுப்பினர்களாயிருப்போர் பெண்களாயிருந்தால்எப்போதும், தானே தலைவியாக வரவேண்டும் என்றே சண்டையிட்டுக்கொண்டிருக்கின்றனர்.**

சண்டை நடக்கிறது! அதனைத் தான் நாம் தலைப்பிலே தந்துள்ளோம்!! வேடிக்கைக்கு அல்ல, இதே இலட்சணத்துடன், சென்னைக்கு அருகாமையிலுள்ள ஒரு மாவட்டத்தில், தகராறு முற்றியிருக்கிறது. ஏன் இப்படித் தலைவியாகவர, சண்டைபோடுகிறார்களாம் தெரியுமா?

பெண்களிடை இங்கு போட்டியும், பொறுமையும் சண்டையும் கூச்சலும் நிலவுவதற்கு முக்கியமான காரணம், இந்தத் தலைவியர் திட்ட வேலைகளுக்கான ஜீப் கார்களை உபயோகிப்பதுதான்.

‘ஜீப்’ காரில் அவள் மட்டும் என்ன ஊர் சுற்றுவது — உறவினரைப் போய்ப்பார்ப்பது—ஓசி டிரைவர் வைத்துக்கொள்வது — உத்யோகம் பார்ப்பது என்று உடம் பெரிச்சல் உண்டாகி, அதன் விளைவாகச் சண்டைகளும் தகராறுகளுமே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன, என்கிறது மதிப்பீட்டுக் குழு.

சில குழுக்களின் தலைவியர் முக்கிய அதிகாரிகள், மந்திரிகள், காங்கிரசுத் தலைவர்களின் மனைவிமாரா யிருக்கின்றனர்.

இதுதான், இத்தனை அல்லலுக்கும் காரணம்! கலெக்டர் மனைவி சமுக நல போர்டுத் தலைவியாயிருந்தால், மந்திரி மனைவியின் மைத்துனிக்குப் பிடிப்பதில்லை, அவள் தலைவியானால் காங்கிரசுத் தலைவரின் அண்ணன் மகளுக்குப் பிடிப்பதில்லை, அவள் தலைவியானால் காங்கிரசு நம்பிக்கொண்டிருக்கும் உள்ளூர்ச் சீமானின் ஒய்யாரிக்குப் பிடிப்பதில்லை; இப்படி ஒருவருக்ொருவரை வீழ்த்திவிட்டு, யார் தலைவியாக வருவது, யார் சர்க்கார் ஜீப்பில் பவனி வருவது என்பதிலேயே, காலத்தையும் கருத்தையும் வீணுக்கிக்கொண்டிருக்கின்றனர்.

பசித்தவள் கையில், பானை கிடைத்தால், பயன்படும்! இவர்களெல்லாம், பசிக்க மருந்து தேடும் பாவைக்கூட்டம்! எனவே, ‘சமுக நலம்’ என்பது புது வைர பேசரி போலவும்; பொன் துகில் போலவும் கருதிப் போட்டிச் சண்டையிடுகின்றனர்.

சண்டையில் ஈடுபடும் ஒவ்வொருவரும், சமபலம் உள்ளவர்களாகவுமிருக்கிறார்கள்! என் கணவர் யார் தெரியுமா என்றால், இன்னொரு அம்மை என் புருசன் போன ஆண்டு வரையில் டில்லி மந்திரியாயிருந்தவர் என்கிறார்; இன்னொரு அம்மை, உன் புருசனையே மந்திரியாக்கியவர் என் வீட்டுக்காரர்; எங்கள் பணத்தில்தான் உங்கள் காங்கிரஸ் மஞ்சள் குளிக்கிறது என்கிறார். தீராத்தொல்லை! ஓயாச் சண்டை!! இந்த உல்லாச அம்மாமிகளுக்கு ஊர்ப் பணம் பாழ்! பாழ்! பாழ்!!!

இந்த அலங்கோலத்தைக் கண்ட, மதிப்பீட்டுக் குழு, மாற்று யோசனைகளையும் தந்திருக்கிறது.

அதையே நாம், அரசில் உள்ள நல்லோர், எண்ணிப்பார்க்க வேண்டுமென விரும்புகிறோம்.

“இந்தத் திட்ட அமுல் குழுவில் எல்லாக் கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் தர வேண்டும்!!

தெரிவிக்கிறது, மதிப்பீட்டுக் குழு. இதையே, நாமும் வலியுறுத்துகிறோம். சமுக சேவையென்பது சல்லாத்துணியணிந்த உல்லாச மாதரின் கொல்லைப் புறத்துக் கிரையல்ல! அதில் ஈடுபட, உள்ளத் தூய்மையும், தியாக உள்ளமும் வேண்டும்!! அந்தப் பணியில் ஈடுபட்டுப் பழக்கமுள்ளோர், வேறெந்தக் கட்சியையும்விட, திராவிட முன்னேற்றக் கழகத்தில் அநேகம்.

மூவலூர் மூதாட்டியும், அலமேலு அப்பாதுரையும், சத்திய வாணிமுத்துவும், ஊருக்கு ஊர் சம்பளமில்லா சமுக சேவகிகளாகப் பணிபுரியும் சகோதரிகளும் இங்கு ஏராளமிருக்கிறார்கள்! அவர்களையெல்லாம் பயன்படுத்தும் ஆர்வம் வரவேண்டும் அரசுக்கு!!

ஏதோ, இந்தப் போர்டும், தங்கள் பெண்டாட்டி பிள்ளைகளின் உல்லாசப் பொழுதுபோக்குக்கு ஏற்பட்டதாக, அமைச்சர்கள் எண்ணிடும் வரையில்—பயன் கிடையாது! ஏழையின் வயிற்றைக் கிண்டி வாங்கிய பணத்தை அழித்த பழிதான் மிஞ்சும்!!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அமைத்துள்ளது. 19-இடங்களைப் பெற்ற **கார்க்காபரிஷத்** முக்கிய எதிர்க்கட்சியாகும். மொத்தம் ஆறு அரசியல் கட்சிகள் உள்ளன.

புதிய அரசியலமைப்புப் பிரகடனமான அன்றுதான் மகேந்திரனின் பிறந்த நாளாம்! இரண்டையும் ஒட்டியே அவன்மனைவி, இரத்னலட்சுமி மக்களுக்கு விருந்து அளித்திருக்கிறாள்!!

புது விருந்து உண்டு நேபாள மக்கள் பூரிப்புடன் உலவும் கட்டம், உலக அரங்கில் ஏற்பட்டிருக்கிறது.

இச் செய்தி கேட்டதும் **‘செச்சே! எவ்வளவு சின்னப் பூமி. இருப்பதோ 85 இலட்சம் பேர்தானே. இவர்களுக்கு ஜனநாயக மணம் கிடைத்தது ஒரு பெரிய சேதியா? சின்ன நாடு, எதைச்சாதிக்க முடியும்! நேருவுடைய இந்தியாவைப்போல அவ்வளவு பெரிதா?”** என்று எண்ணவில்லை அமெரிக்கா!!

நேபாளத்துத் தலைநகரான காட்மாண்டில், விரைவில் தன்னுடைய அரசியல் தூதருடைய அலுவலகத்தை நிறுவி, நேபாள அரசுடன் நேசம்கொள்ள விழைவதாக அறிவித்திருக்கிறது.

கண்டதும் கேட்டதும்

"வானத்தைப் பார்க்கிறேன்; மேகங்கள் தென்படுகின்றன. பூமியைப் பார்க்கிறேன்; எங்கும் ஒரே புகை மண்டலமாக இருக்கிறது. தினசரி இதழ்களைக் காண்கிறேன்; திகைப்பும் பதைப்புமே ஏற்படுகிறது எனக்கு. என்னைச் சுற்றிலும் பார்க்கிறேன்; தோழர்களாயிருந்தோரே விரோதிகளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், நான் என்ன செய்வேன் இந்திரா? என்ன செய்வேன்?" — என்கிற குரல் கேட்டு, பழக்கமான குரலாயிருக்கிறதே, என்று என் மனோரதத்தை இறக்கிவிட்டேன். குளு குளுவென்றிருந்தது! மலையுச்சியும் மரக்காவும் தென்பட்டன! அங்கேயுள்ள ஒரு மாளிகையின் கூடத்திலே, மாவீரர் பண்டித நேரு நின்றுகொண்டிருந்தார். எதிரே மகள் இந்திரா காந்தி இருந்தார். தந்தையின் முகத்திலே கலக்கம்! மகளின் வதனத்திலே திகைப்பு!!—நுழையலாமா, கூடாதா என்று நான் யோசித்தேன், "இந்திரா! எதையும் தாங்கும் இதயம் வேண்டிய நேரம், எனக்கு வந்திருக்கிறது. டில்லியில்தான் வேதனை தாங்க முடியவில்லையென்று இந்தச் சிம்லாவுக்கு ஓய்வெடுக்க வந்தேன். இங்கே வந்தும், உள்ளத்தைக் கிளறிவிட்டுப் போய்விட்டார், இந்த நம்பூதிரிபாத். அழகான ரோஜாவுக்கும் ஒரு அந்திய காலம் உண்டு என்பார்கள். என் அரசியல் வாழ்க்கையின் அந்திய காலமோ, என்னவோ. ஒரே குழப்பமாயிருக்கிறது. சரி, சரி. போ! ஓய்வுக்கு வந்தது போதும். போய் மூட்டை முடிச்சுகளைக் கட்டு. டில்லிக்கே போய்த் தொலைவோம். போ," என்று கூறினார். எந்தப் பதிலும் பேசாமல், அந்த இடத்தைவிட்டு, இந்திராதேவி நகர்ந்தார். என்னடா இது, நீண்ட நாட்களுக்குப் பிறகு, பேட்டி காணப் புறப்பட்டோம், ஆரம்பமே ஆத்திரமாகயிருக்கிறதே, என்று யோசித்துக்கொண்டே நின்றுவிட்டேன். வெளியில் வந்த இந்திரா, என்னைப் பார்த்துவிட்டார் போலிருக்கிறது. "யார் நீ?," என்று அதட்டினார். "நான் தாம்மா! ஞானக்கண் தெற்கே சுற்றுப்பயணம் வந்தபோது, என்னைப் பார்த்தீர்களே? ஒவ்வொரு ஊரிலும், என் தூதர்கள், பறந்துகொண்டிருந்தார்களே! ஞாபகம் வரவில்லையா?," என்றேன். விழித்தார் அம்மையார்! ஒவ்வொரு ஊரிலும் திராவிட முன்னேற்றக் கஜகக் கொடி (கழகம் என்பது அம்மையாரின் வாயில் வரவில்லை; கஜகம் என்றே சொன்னார்கள்!!) பறந்ததைத்தானே பார்த்தேன். உன் தூதர்கள் பறந்தார்களா?— என்றார் இந்திரா. கொடியெல்லாம்

நமது "ஞானக்கண்" நிருபர்

என் தூதர்கள்தான் என்று ஏன் அவரிடம் கூறவேண்டும்? அப்பாவைப்போல அவரும் கோபக்காரராமே! அதனால், கோபம் வராதபடி பேச்சைத் துவங்கலாம் என்று, ஆரம்பித்தேன், "அம்மையே! தாங்கள் காங்கிரஸ் தலைவியான பிறகு, காங்கிரஸ் ரொம்ப ரொம்ப வளர்ந்துவிட்டது. அடடா, அந்த வளர்ச்சியை, இவ்வளவு பெரிய இந்தியா தாங்குமா, அல்லது வழிந்தோடி கடலுக்குள் எல்லாம் நுழைந்துவிடுமா என்று அஞ்சும்படியிருக்கிறது. எங்கே பார்த்தாலும், இதே பேச்சுத்தான்! உங்களைப் பற்றித்தான் பேசுகிறார்கள்!!," என்றேன். திகைப்பு இருந்த வதனத்திலே களிப்புப் பிறந்தது. என்ன இருந்தாலும் அவரும் பெண் தானே? பெண்ணின் கவனத்தைக்கவரக் கொஞ்சம் 'முகதுதி' போதும் என்பார்கள் மனவசியக்காரர்கள்! பலித்தது இங்கும்!! உட்காரு, உட்காரு என்றார் — காங்கிரஸ் வளர வேண்டும் என்பதற்காகத்தான் அப்பா என்னையே தலைவியாகச் சொன்னார். நானும், பாரப்பா நான் தலைவியானதும் காங்கிரசை என்ன செய்யப்போகிறேன் என்றேன்— ஆமாம், கேரளத்தில் பார்த்தீரல்லவா, கம்யூனிஸ்டு ஆட்சியைக் கிடுகிடுக்க வைத்து வருகிறார்கள் காங்கிரஸ்காரர்கள்— எல்லாம், என் திட்டம்தான், என்றார் பூரிப்போடு.

"ஆமாமாம்! தேபர் இருந்தார் அவருக்குக்கூட இப்படியெல்லாம் செய்யத் தெரியவில்லை. ஆமா! கேரளாவில் நடப்பதெல்லாம், உங்கள் திட்டப்படி என்றால், முன்னரேயே நேரு அவர்களுக்கும் இப்படியெல்லாம் நடக்குமென்று தெரியுமா தேவி?"

"அப்பாவுக்குத் தெரியாமலா! நான்தானே அப்பாவைக்கூட அங்கே போய்வாருங்கள் என்றனுப்பினேன். எப்படியாவது, கம்யூனிஸ்டுகளைச் சர்க்காரிலிருந்து வெளியேற்றி, ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவந்து, பிறகு பொதுத்தேர்தல் வைத்து,......"

"ஆமாம்! அந்தப் பொதுத் தேர்தலிலும் கம்யூனிஸ்டுகள் வெற்றிபெற்றுவிட்டால்?"

"முடியுமா! வெற்றி பெற விடுவோமா? கம்யூனிஸ்டுகளே மூன்று நான்கு சுயேச்சைகளுடன்தானே அரசாங்கம் அமைக்கமுடிந்தது. அதிகமாகயில்லாவிட்டாலும் சுயேச்சைகளையாவது தோற்கடித்துவிட்டால் நாங்கள்தானே வெல்வோம். இல்லையா?" என்றார்.

அவர் முகத்தில் பலத்த நம்பிக்கை தொனித்தது! அப்படி

தேர்தலில் வெல்லத்தான், இப்படி அறப்போராட்டம், சிறைக்குப் போதல் எல்லாம் நடத்துகிறீர்கள் போலிருக்கிறது —என்றேன்!! "அதிலென்ன சந்தேகம். இப்படியெல்லாம் செய்துதானே, எங்கப்பா காங்கிரசுக்குச் செல்வாக்கு தேடினார்", என்றார்.

"அப்பாவைப்போல் மகள்!"—என்றேன், நான்.

"அப்பாவுக்குப் பிறகு, இந்த மகள்தான்!"—என்றார், அவர்.

"இதெல்லாம், அந்த எதிர் காலத்துக்கு ஒத்திகைபோலும்..."

"கட்சியில் முதலில் செல்வாக்கு! பிறகு, நான்தானே!!"

"என்னமோ, உங்கள் ஆசை பலிக்கிற வரைக்கும் கட்சியிருக்க வேண்டுமே" என்றேன். "என்ன?" என்றார், கோபத்தோடு. மூக்கு நீளமாயிருப்பவர்கள் கோபக்காரர்கள், என்று உடற்கூறு கலை கூறுவதை அறிந்த நான் மேலும் அங்கேயிருப்பேனு! ஒருதாவு தாவினேன்!!

* * *

தாவிய வேகத்தில், அங்கே போடப்பட்டிருந்த சாப்பாட்டு மேசையிலிருந்த தட்டுகள் எல்லாம் உருண்டன. சாப்பிட்ட தட்டுகள், கழுவப்படாமலிருந்ததால், எலும்பும் மீன் வாசனையும் மூக்கைத் துளைத்தது. "காஷ்மீரத்துப் பிராமணர், கேரளத்துப் பிராமணருக்கு வைத்த சாப்பாடு போலும்?" என்றேன்! "என்ன சொன்னுய்?", என்று திரும்பினார், நேரு. என்னைப் பார்த்ததும், நீயா? இங்கும் வந்துவிட்டாயா, என்றார்; அவருக்குப் பிடிக்குமென்று சென்னை பூக்கடையில், ரோஜா ஒன்று வாங்கிப்போயிருந்தேன். மரியாதையுடன் அதை நீட்டினேன்! "ரோஜா! சிகப்பு ரோஜா? ஊம்..." என்று பெருமூச்சு விட்டபடியே, மேஜைமேல், எறிந்துவிட்டு, "ஆமாம்! உனக்கு என்ன தைரியமிருந்தால் என்னெதிரிலேயே வந்து, என்னைக் காஷ்மீர்ப் பார்ப்பான் என்று சொல்வாய்! உங்களையெல்லாம் சொல்லிக் குற்றமில்லை. காலம் அவ்வளவு கெட்டுப்போய் விட்டது" என்றார்.

"மன்னிக்கவேண்டும்! உங்களை, சும்மா வந்து பார்த்துவிட்டுப் போனவன் நம்பூதிரிபாத்தைப் பார்த்து, ஒரு நிருபர் நான்சொன்னதுபோலக் கேள்வி கேட்டிருக்கிறார், டில்லியில், அதைத்தான் சொன்னேனே தவிர, உங்களெதிரில் வந்து இப்படியெல்லாம் பேச எனக்கேது தைரியம் என்றேன்.

"நிருபர் கேட்டாரா! கேட்டிருப்பார்; கேட்டிருப்பார். எந்த நிருபர்கள் என் விழி அசைந்தால், மிரள்வார்களோ; என் மொழிகேட்க ஆவலோடு காத்துக்கிடப்பரோ; அவர்களெல்லாம் கேலி செய்யும்படியாகி விட்டது என் நிலைமை! என்னென்ன கேட்கிறார்கள், இந்த நிருபர்கள்!!" என்று வானத்தைப் பார்த்தபடியே, பெருமூச்சுவிட்டார்.

"போனவாரம், டில்லியில், இந்த நிருபர்கள்உங்களைப்பார்த்துகேட்ட கேள்விகளையெல்லாம் நான்கூடப் படித்தேன். ரொம்பத் தைரியம் தான்!" என்றேன்.

"அதையேன் கேட்கிறாய்? ஒரு நிருபன் கேட்டான், ஏன் சார், நீங்கள் சுற்றுப்பிரயாணம் போனல் இந்த அதிகாரிகள் எல்லாம் வந்து கூடுகிறார்களே, அதனுல் நிர்வாகம் பண்ணவேண்டிய நேரம் தானே வீணுகிறது, என்று. நானும், ஆமாம்—இதுபோல அதிகாரிகள் மட்டுமல்ல, மந்திரிகள், ஜட்ஜுகள் எல்லாம் கூடவருகிறார்கள்—எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை என்றேன். உடனே, அவன் என்ன சொன்னுன் தெரியுமோ? உங்களை வந்து காக்காப் பிடிக்காவிட்டால் அடுத்த தடவை காங்கிரசில் நிற்க டிக்கட் கிடைக்குமா! அதனுல்தான் வந்து நிற்கிறார்கள்!! என்றான். என்னிடம் வந்து, இப்படிக் கேட்டான்."

"நான்சென்ஸ்! காட்டுமிராண்டித்தனம்!! இப்படி ஏதாவது சொல்லி நிருபர் மூக்கை உடைத்தெறிந்திருப்பீர்களே."

"இதுவா சமயம்? நான்தான், என் மகளுக்காகக் கேரளத்துப் பிரச்சினையில் மாட்டிக்கொண்டு மூக்குடைபடுகிறேனே, போதாதா? என்னவோ, அதோ பார் ஆகாயத்தை! அமுதத்தை அள்ளித் தெளிக்கும் அழகு நிலாவை மேகங்கள் வட்டமிடுகின்றன? ஒளி மறைந்து; இருள் பரவுவது போலிருக்கிறது! உலகமே, என்னைப் புகழ்கிறது. ஆனல், நண்பர்கள் என்னைத் தூற்றுகிறார்கள். சிசருக்கு ஏற்பட்ட சிந்தா கூலம், நெபோலி

பதினெட்டே!

ஒருபத்து உடன்ஏழு தாண்டி இன்று
ஒப்பற்ற பதினெட்டில் நுழையும் பெண்ணே!
திருவிடத்துப் பேரெழிலே! தேன் சொட்டும்
தெள்ளறிவை உன்னிதழில் தந்து தந்து
உரிமையுணர் வெமக்கூட்டிக் கிழமை தோறும்
ஒய்யாரப் பவனிவரும் பருவப் பெண்ணே!
வறுமையில்வாழ் திராவிடரின் துயரம் போக்க
வழிகாட்டும் 'திராவிடநா(டு)' டென்னும் பெண்ணே!

சிறந்தாழ்த்தாத் திராவிடத்தில் ஆண்கள் பெண்கள்
திறன்மறவர் கலைஞரொடு உழவர் மேலோர்
மறந்தாலும் அறம்பிறழா வறியர் செல்வர்
மாசற்ற தொழிலாளர் கற்கும் ஏறு(உ)ன்
பிறந்தநாள் வந்ததினுல் ஒன்றாய்க் கூடி
பெருமகிழ்வு அடைகின்றார்; உந்தன் காதில்
விருந்தொன்று அளிக்கின்றார் ஏட்டுப் பெண்ணே!
'விரைவினிலே திராவிடத்தை மீட்போம்!' என்று.

— பே. சா. தனராசு.

யனுக்கேற்பட்ட நெஞ்சு வேதனை... ஊம்!... சரி, போ. போ.'' என்று கத்தினர். எனக்கே, பரிதாபமாயிருந்தது. கிளம்பினேன்.

* * *

சரிந்த சாம்ராஜ்யங்களின் சாம்பல் மேடு என்பார்கள் டில்லியை! மொகலாய மன்னர்கள் மோகனக் கொலுவிருந்து, அழிந்ததும் அங்குதான். அந்தச் சுந்தரபுரியைச் சுற்றிவந்தேன், அரசாங்கம் கட்டியிருக்கும் அழகான, **அசோக்விகார்** ஒட்டலைப் பார்த்தேன். பிரமித்தேன். அகில உலகிலுமிருந்து, எந்தெந்த நாட்டில் எந்தெந்தச் சமயற்காரன் சிறந்தவனென்று சொல்கிருர்களோ அவர்களையெல்லாம் அழைத்துவந்து வேலைக்கு வைத்திருக்கிருர்களாம். அன்ருடங் காய்ச்சிகளின் தேசம் என்கிருர்கள்! ஆனல், அசோக் விகாருக்குள் நுழைவதென்ருல்அரைநூறு இல்லாமல் முடியாதாம்!! அண்ணுந்து பார்த்தபடியே போனேன். அந்தக் காலத்தில், வைஸ்ராய்கள் தங்கியிருந்த மாளிகை தென்பட்டது. அங்குதானே குடியரசுத் தலைவர் இராசேந்திரர் இப்போதிருக்கிருர். அவருக்கும் நேருவுக்கும் தகராறு என்று சொல்கிருர்களே, விசாரித்தறிவோம், என உள்ளே போனேன்!!

காலைக்கடனையெல்லாம் முடித்துவிட்டுக் கம்பீரமாக வந்து அமர்ந்தார். வெளிநாட்டு அரசியல் தூதர்கள் ஒருபுறமும், விருந்தினராக வந்த அந்நியப் பிரமுகர்கள் மற்ருெருபுறமும், அவருடைய பேட்டிக்காகக் காத்திருந்தனர். அவர்களோடு, கோவணுண்டிகளான ஒரு சில சாமியார்களும் இருந்தார்கள். எல்லோரையும் விட்டுவிட்டு அந்தச் சாமியார்களை மட்டும், பேட்டிக்கு அழைத்துச் சென்ருர், சனதிபதியின் மெய்ப் பாதுகாப்பாளர். நானும் காத்திருந்தேன், காத்திருந்தேன். காணவில்லை. சகஸ்ரநாம அர்ச்சனையில் ஈடுபட்டார்போலும்என்றெண்ணிக் கொண்டு, அரசியல் வட்டாரத்தை ஒரு அலசு அலசிவிட்டு வரலாமெனக் கிளம்பினேன். அங்கெல்லாம் கேட்டவற்றை விவரிக்க மனம் வரவில்லை. இதோ, என் 'டைரி'

மொரார்ஜிதேசாய்:- இந்த நேரு எப்போது மாட்டிக்கொள்ளுவார் என்றுதான் நானும் காத்திருந்தேன். வசமாக மாட்டிக் கொண்டுவிட்டார். ஜனநாயகத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு, மகள் பேச்சைக் கேட்டு, கேரளத்தில் நேரடி நடவடிக்கையெடுக்க எப்படி அனுமதிக்கலாம்? உலகம் சிரிக்கிறதே! சிரிக்கட்டும், சிரிக்கட்டும், நன்ருகச் சிரிக்கட்டும். காங்கிரஸ் என்ன, இவர் வீட்டுக் காளைமாடா? இந்திராவைவிட, தலைமை தாங்க ஆளே இல்லையா! என்னமோ அப்பனும் மகளும் சேர்ந்துகொண்டு, அப்படியே கட்சியை முன்னேற்றுவிக்கப் போவதாகச் சொன்னுர்களே! இப்போது என்ன ஆச்சு? முகமூடி கிழிந்தது! உலகம் சிரிக்கிறது!!

பண்டிதபந்த்:- எப்போதுமே, இந்த நேருத் தம்பிக்கு, அவசரம் தான். சிறு வயது முதல் நான் பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். கட்சிக்கு வலிவு தேடுவதற்காக, கேரளத்துக் காங்கிரஸ்காரர்களைத் தூண்டிவிட்டு விட்டது. ஆனல், இப்போது அகப்பட்டு விழிப்பது யார்? உள்நாட்டு மந்திரியான நான்தானே! பம்பாய்க்காரன் பயப்படுகிருன்—வங்காளி வருந்துகிருன்—பீகார் பெருமூச்சு விடுகிறது. இந்த மாகாண முதல் மந்திரிகளைக் கூப்பிட்டு, கேரளத்தில் காங்கிரஸ் நடவடிக்கையெடுத்ததையொட்டி உங்கள் மாகாணத்தில் ஏதாவது எதிரொலி கிளம்புமா என்று கேட்டேன்; எல்லா முதல் மந்திரிகளும் என்னிடம் சண்டைக்கு வருகின்றனர்! நான் என்ன செய்வது? ஆடும் தலையை நிறுத்தவே முடியாத என்ருல், வளரும் இந்தத் தொல்லைகளையா நிறுத்த முடியப் போகிறது?

✻

★

விரைவில்!

அரங்கண்ணல்

அளிக்கும்

தொடரோவியம்

துவங்கும்.

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ... சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.